
# திருமலைத்தீபம்
Thirumalaitheepam

தீபம் - 67 August Email : theepamlink@gmail.com TP: 026 2221022/ 026 2054362 Rs. 30/=

அருட்பணி. கிறிஸ்டி போல் எழுதும் புதிய தொடர்


12 ஏதேன் தோட்ட மனிதர்கள்

இவ்வெளியீடு 04 போனஸ் பக்கங்களுடன்

இம்மாத சிறப்புக் கட்டுரை

Fr. T. A. ஜூலியன் எழுதும்

நீரிழிவும் பேரிழிவும் 05



## அன்னை மரியாவின் விண்ணேற்பு

**அருட்பணி. அந்திரியாஸ் பெர்னான்டோ OMI**

"மரியா, தம் இவ்வுலக வாழ்வுப் பயணம் முடிவுற்றதும், உடலுடனும் ஆன்மாவோடும் விண்ணக மாட்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்." இந்த உண்மை எல்லாக் கத்தோலிக்க மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு கிறிஸ்தவ கோட்பாடு என 1950ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ம் நாள் திருத்தந்தை 12ம் பியுஸ் அறிக்கையிட்டார்.

எந்த ஒரு கோட்பாடும் காலம் தரும் பாடம். வரலாற்றுப் பயணத்தில் கோட்பாடுகள் திடீரென்று முளைவிடும் ஒன்றல்ல. காலம் காலமாக கொஞ்சம் கொஞ்சமாக அது வளர்ந்து வருவதைப் பார்க்க முடியும். இந்த நம்பிக்கை மற்றும் வளர்ச்சியின் முதிர்ச்சி தான் கோட்பாடு. இதைத்தான் "நம்பிக்கையாளர்களின் நம்பிக்கை" என்று இறையியலாளர்கள் அழைப்பர். மரியா விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். என்பது ஓர் கதையின் மீது கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கையல்ல. மாறாக அன்னை விண்ணேற்பு அடைந்தார் என்ற நம்பிக்கையின் மீது கட்டியெழுப்பட்டதாகும். அன்னை மரியாவின் இறுதி காலத்தைப் பற்றி மிக உறுதியாக சொல்லும் நேர் சாட்சிகள் இல்லை. அவரது மரணத்தை நேரில் பார்த்தவர்களும் இல்லை.



இருப்பினும் மரியாவின் விண்ணேற்பு பற்றிய இந்த நம்பிக்கை கி.பி. 5ம் நூற்றாண்டிலிருந்தே கிறிஸ்தவ மரபில் தொடர்ந்து வளர்ந்துள்ளது. விண்ணேற்பு என்பது எங்கோ வானின் உயரத்தில் உள்ள இன்னொரு உலகிற்கு மரியா சென்று, அங்கு மண்ணக அரசிகளின் தோரணையில் மணிமுடியும் ஒளிரும் பட்டாடையும் அணிந்து அரியணையில் வீற்றிருக்கும் நிகழ்வாக கற்பனை செய்யும் மனநிலை நம்மில் உருவாக முடியும். ஆனால் விண்ணேற்பு என்பது இறைவன் மரியாவுக்கு ஆற்றிய அரும்பெரும் செயல்களுள் இறுதியானது. "நான் ஆண்டவரின் அடிமை" எனத் தம்மையே முழுமையாகவும் இறுதிவரையிலும் இறைத் திருவுளத்திற்கு அர்ப்பணித்த மரியாவை இறைவன் நிறைவாக மகிமைப்படுத்திய செயலே அது. இன்னொரு வகையில் சொல்லப்போனால் விண்ணேற்பு என்பது தம் மகன் இயேசுவின் பணிகளிலும் பாடுகளிலும் முழுமையாக பங்கேற்ற மரியா அவரது உயிர்ப்பு விண்ணேற்றம் என்பனவற்றிலும் முழுமையாகப் பங்கேற்ற நிறைமகிமை நிலைதான் அவரது விண்ணேற்பு...

தம் விண்ணேற்றத்தின் வழியாக இயேசு நம்மை விட்டு செல்லவில்லை. மாறாக இன்றும் நம்மோடு உயிர் தரும் ஆற்றலாக, வாழ்விக்கும், வளர்விக்கும், வல்லமையாக செயல்படுகிறார். அது போலவே மரியாவும் விண்ணேற்பின் வழியாக நம்மை விட்டு தூர செல்லவில்லை. நிறைவாழ்வு நோக்கிய நம் பயணத்தில் நம்மோடு இணைந்துள்ளார்.

தொடர்ச்சி 10ம் பக்கத்தில்...

## மறைமாநில ஆயரின் செய்தி



**அன்பான வாசகர்களுக்கு, கிறிஸ்து இயேசுவின் இனிய பெயரால் வாழ்த்துக்கள்!**

எமது கிறிஸ்தவ வாழ்வில் பல சவால்களையும் தடைகளையும் எதிர்கொண்டு பயணித்துக் கொண்டிருக்கின்றோம். கடந்த வருடம் ஏற்பட்ட குண்டு வெடிப்பு அனர்த்தத்தால் எமது நாளாந்த வாழ்வு சில மாதங்கள் குழம்பியிருந்தது. எமது பாதுகாப்பு, எமது ஆலயங்களின் பாதுகாப்பு பற்றி சிந்தித்து பல பாதுகாப்பு ஒழுங்குகளைச் செய்யவேண்டியிருந்தது.

இவ்வருடம் கோவிட் -19 தொற்றுநோயால் உலகமே நின்றுபோயிருந்தது. அனைத்து நாடுகளும். மதங்களும் சமூகங்களும் தமது பயணத்தின் வேகத்தைக் குறைத்து செயல்பட வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டன. சமூக இடைவெளி கட்டாயமாக்கப்பட்டது. எமது நலனையும் அடுத்திருப்பவர் நலனையும் அதிகம் கருத்திற்கொண்டு செயல்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

ஆலயங்களில் திருப்பலியோ ஒன்றுகூடலோ இல்லை. இந்நிலை ஆரம்பத்தில் இறுக்கமாகக் கடைபிடிக்கப்பட்டாலும் நிலமை சீரடைய குறிப்பிட்ட அளவிலான மக்களோடு திருப்பலி நிறைவேற்றலாம் எனும் சூழ்நிலை உருவாகிறது. மக்களோ திருப்பலியில் பங்குபற்றி நற்கருணை பெற முடியாமல் ஏங்கித் தவித்தனர். இந்நிலையில் குருக்களும், நம்பிக்கையாளர்களும், வட்டாரத் தலைவர்களும் மாற்று வழிகளைத் தேடினர். சமூகத் தொடர்பாடல் மூலமாக தொலைக்காட்சி, வலையொளி, முகப்புத்தகம் போன்ற வசதிகளைப் பயன்படுத்தி திருப்பலி. நற்கருணை ஆராதனை தியானம், தியான உரைகள் என்பன மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் பொதுநிலையினரின் சிறப்பான பங்கு உணரப்பட்டது. ஆன்மீகம், மட்டுமல்ல சமூகச் செயல்பாட்டிற்கும் இவர்களது பங்களிப்பு சிறப்பாக அமைந்திருந்தது.

சமூகத்தின் தேவையறிந்து ஆர்வத்தோடு செயல்பட்டு மக்களுக்கு வேண்டிய ஆன்மீக சமூக தாகத்தைத் தீர்த்த குருக்கள். துறுவறத்தவர், பொதுநிலை பொறுப்பாளர்கள், ஊக்குவிப்பாளர்கள் அனைவரையும் நாம் பாராட்டுகின்றோம்.

ஆகஸ்ட் 15ம் திகதி மரியன்னையின் விண்ணேற்புப் பெருவிழா, எமது பேராலயப் பெருவிழா. மரியன்னையின் ஆசீரும், வழிகாட்டலும், பரிந்து பேசுதலும் எப்போதும் உங்களோடு இருக்க ஆசிக்கிறேன். மரியன்னையின் சிறந்த பண்புகளான பணிவு, கீழ்ப்படிவு இன்று எமக்கும் உதாரணமாகும். எமது மனநிலைகளுக்கு சவால் விடுப்பதாகவும் அமைகின்றது. அவரது "ஆம்" எனும் நம்பிக்கை நிறைந்த பதில் இன்று எமக்கு மீட்பைத் தந்தது. நாமும் எப்போதும் இறை விருப்பத்திற்கு பணிந்து நடப்போம்.

ஆகஸ்ட் 25ம் நாள் எமது மறைமாவட்டம் உருவாகி 127 வருடங்கள் முடிகின்றன. எமது திருகோணமலை மறைமாவட்டத்தில் சாட்சி நிறைந்த குடும்பமாக நாம் மாற வேண்டும். எமது நம்பிக்கை நிறைந்த சான்று வாழ்வு, பிறரன்பு, சமூகப்பணிகள், நீதி. சமாதானத்திற்காக குரல் கொடுத்தல் என பலவற்றை நாம் சாதிக்க வேண்டும். மறைமாவட்ட சமூகமாக நாம் இணைந்து செயல்படுவோம். இறைவன் புகழ் எங்கும் ஓங்கி ஒலிக்கட்டும். ஆண்டவர் உங்களை என்றும் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவில்,

**பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்

விண்ணேற்பு அன்னையின் திருநாள் நல்வாழ்த்துக்கள்

## "நற்செய்தி அறிவிப்புப்பணியின் மொழி பிறரன்பு" - கர்தினால் தக்லே (Cardinal Tagle)

**'அருள்பணியாளர்களை உருவாக்கும் பயிற்சியில், பிறரன்புச் செயல்கள் ஆற்றப்படுவதை ஊக்குவிக்கவேண்டும்' -கர்தினால் தக்லே**

இக்காலத்தில் நற்செய்தி அறிவிப்பிற்கு, மாபெரும் இறையியல் விளக்கங்கள் அல்ல, மாறாக, பிறரன்பு என்ற மொழியே மனித சமுதாயத்திற்குத் தேவைப்படுகின்றது என்று நற்செய்தி அறிவிப்புப்பணி பேராயத்தின் தலைவர் கர்தினால் லூயிஸ் அந்தோனியோ தக்லே அவர்கள் கூறினார்.

உரோம் நகரிலுள்ள வின்செண்ட் டீ பவுல் துறவு சபையின் உறுப்பினர்களுக்கு உரையாற்றிய கர்தினால் தக்லே அவர்கள், இன்றைய நற்செய்தி அறிவிப்புக்குத் தேவையான மூன்று முக்கிய கூறுகள் மற்றும் பணிகள் பற்றி எடுத்துரைத்தார்.

1. மற்றவர்களிடம் பிறரன்பைத் தூண்டுபவர்களாகச் செயல்படுதல்
2. குழுமங்களை உருவாக்கும் பிறரன்பில் ஈடுபடுதல்
3. அருள்பணியாளர்களை உருவாக்கும் பயிற்சியில், பிறரன்புச் செயல்களை ஊக்குவித்தல்


ஆகிய மூன்று கூறுகள் குறித்து கர்தினால் தக்லே அவர்கள் விளக்கிக் கூறினார்.



நம் பொதுவான இல்லமாகிய இப்பூமியைப் பாதுகாப்பது குறித்துப் பேசும் திருத்தந்தையின் திருமடல் சூழலியலை விளக்கும் ஏடு அல்ல, என்று கூறிய கர்தினால் அவர்கள் அது, திருஅவையின் கோட்பாடு என்றார். இந்த விவகாரங்களில், ஆயர்கள் மற்றும் அருள்பணியாளர்கள் மத்தியில்கூட போதுமான அளவு ஆர்வம் காட்டப்படவில்லை என்ற கர்தினால், படைப்பு மற்றும் கடவுளின் வேலைகளைப் பாதுகாப்பது மட்டில் கிறிஸ்தவர்கள் இயற்கை அல்லது சுற்றுச்சூழல் என்பதோடு மட்டும் நின்றுவிடுகின்றனர் என்று தம் கவலையை வெளியிட்டார் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 வருட ஆயர்த்துவ வாழ்வின் நிறைவைக் காணும் எமது மறைமாவட்ட ஆயருடன் நேர்காணல்



சென்ற மாதத் தொடர்ச்சி...

**11. வெல்வெரி திருத்தலத்தில் நடைபெறும் மறைமாவட்ட ஒன்றுகூடலின் வழியாக அருட்பணியாளர்கள், அருட்சகோதர சகோதரிகள், பங்குத்தந்தையர்கள், இறைமக்கள் வளர்ச்சியடைந்துள்ளார்களா? உங்களது கணிப்பு என்ன?**

வருடாவருடம் வெல்வெரியில் நடைபெறும் ஒன்றுகூடல் எமது ஆன்மீகத்தை வளர்க்க நாம் எடுக்கும் முயற்சியே. வழியை நாம் காட்டலாம். பயணிப்பது மக்களே. குருக்கள் பங்குமக்களோடு இணைந்து மக்களை இவ்விடத்திற்கு அழைத்துவரும்போது நல்ல பயன் தரும் என்பது எனது நம்பிக்கை.

**12. தற்கால சூழலில் மறையாசிரியர்களின் பங்களிப்பு எவ்வாறு அமையலாம்?**

தற்கால சூழ்நிலைக்கேற்ப அவர்களும் சிந்தித்து செயல்பட வேண்டும். (மறையாசிரியர்கள் தமது பங்குத் தந்தையோடு கலந்தாலோசித்து பல மறைக்கல்வி முறைகளைப் பயன்படுத்தி பிள்ளைகளை வழிநடத்தலாம்). மறைக்கல்வி நடுநிலையத்தால் பல விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனாலும் எல்லாவற்றிற்கும் மறைக்கல்வி நடுநிலையத்தையே நம்பியிருக்க வேண்டிய அவசியமில்லை.

மேலாக இவர்களது சான்று வாழ்வு முக்கியமானது. இவர்களது ஆன்மீகமே சிறந்த மறைக்கல்வியாகும்.

**13. மறையாசிரியர்களின் பணிவாழ்வின் வளர்ச்சியை எவ்வாறு உணருகிறீர்கள்?**

மறைக்கல்வி நடுநிலையம் ஒழுங்கு செய்யும் வேலைத்திட்டங்களைப் பயன்படுத்தியும் பங்குத் தளங்களில் செயல்திட்டங்கள் உருவாக்கியும் செயல்படும் ஆற்றல் இன்று மறையாசிரியர்களுக்கு அதிகமுள்ளது. பல வருடங்களாக மறைக்கல்வி நடுநிலையம் திட்டமிட்டு பல செயல்பாடுகளை நிறைவேற்றியுள்ளது. க.பொ.த சாதாரண தர மாணவர்கள், க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்குகள், மாதிரிப் பரீட்சை, மறையாசிரியர் 1,2,3 பரீட்சைகளுக்கான கருத்தரங்கு, வழிகாட்டல்கள் "Dharmachariya" அரச பரீட்சைக்கான ஆயத்தங்கள், மறையாசிரியர்களுக்கான சிறப்புக் கருத்தரங்குகள் எல்லாம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ மறையாசிரியர்களின் வளர்ச்சியில் உதவியுள்ளன என்பதே உண்மை.

மறையாசிரியர்கள் பங்குத் தளங்களில் பணிக்கென அழைக்கப்படும்போது முன்வந்து பங்களிப்பதும் கண்கூடு.

**14. அப்போஸ்தலிக்க சபைகளின் வளர்ச்சி போதுமானதாக உள்ளதா? (பக்திச்சபைகள்)**

அப்போஸ்தலிக்க சபைகள் செயல்படுகின்றன. இவர்களது சான்று வாழ்வு மிக முக்கியமானது. மாறாக ஒரு சிலர் தமது குறுகிய மனநிலையால் பார்ப்போர் நம்பிக்கைக்குத் தடையாகவே உள்ளதையும் உணர முடிகின்றது. இவர் இருந்தால் நான் இச்சபையில் இணையமாட்டேன் எனும் மனநிலை, குறிப்பிட்ட நபர்கள் எமது சபைக்கு வேண்டாம் என்று சிலரை ஒதுக்கி வைக்கும் மனநிலை, தலைமைப் பதவிகளுக்குப் போட்டிபோடும் மனநிலை எல்லாம் கிறிஸ்தவ சான்றுக்கு எதிரானவை. இன்னும் சிலர் பல அப்போஸ்தலிக்க சபைகளில் அங்கத்தவர்களாக இருப்பதும் அடுத்தவர் இணைந்து செயல்படுவதற்குத் தடையாக உள்ளது. இது பொதுவாகவே எல்லாப் பங்குகளிலும் காணப்படும் விடயம். இது பற்றிய தெளிவோடு அனைவரும் செயல்பட்டு மேலும் பலரை உள்வாங்கி பங்கை வளர்ச்சியடையச் செய்யலாம்.

**15. "கொரோனாவுக்குப் பின்" என்ற தற்போதைய திருவழிபாடு உட்பட அனைத்திற்கும் சவாலான காலத்தினை எதிர்கொள்ள நம் மறைமாவட்டதிற்காக நீங்கள் ஆலோசித்துள்ள திட்டங்கள் குறித்து அறியலாமா?**

**அ. "திருவழிபாடு"**

இன்றைய சூழலில் திருவழிபாட்டு முறைகளை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பது பற்றிய சிறப்பு சுற்றறிக்கை இலங்கை ஆயர் மன்றத்தால் வெளியிடப்பட்டது. அனைத்துக் குருக்களுக்கும் இதை அனுப்பி வைத்துள்ளோம்.

வழிபாட்டுத் தளங்களில் 50 பேருக்கு மேல் கூடாமல் வழிபாடுகளை நடாத்தலாம் என அண்மையில் அரசு அறிவித்தபின் எமது மறைமாவட்டத்தில் திருவழிபாடுகள், விசேடமாக திருப்பலி ஒழுங்கு செய்தல் பற்றிய சுற்றறிக்கை ஒன்றை நான் அனைத்துக் குருக்களுக்கும், அதன் பிரதியை இருபால் துறவற இல்ல தலைவர்/தலைவிக்கும் அனுப்பி வைத்துள்ளேன். இதில் விசேடமாக திருப்பலி ஒழுங்குகளைக் குறிப்பிட்டுள்ளேன். திருப்பலியில் பங்கேற்று நற்கருணை பெறுவதற்கான மக்களின் ஆர்வம் பெரும் தாகமாக அதிகரித்துள்ளது. எனவே பங்கு மக்களின் எண்ணிக்கைக்கேற்ப சனிக்கிழமை மாலை (ஞாயிறு கடமை நிறைவேற்றல்) முதல் ஞாயிறு திருப்பலிகளின் எண்ணிக்கையை கூட்டும்படியும் குருக்களின் உதவி தேவைப்பட்டால் பங்குகளில் பணியாற்றாத குருக்களின் உதவிகளை நாடலாம் என்றும் நானும் தனிப்பட்ட முறையில் எந்த ஆலயமானாலும் எந்த நேரமானாலும் வருகை தந்து உதவி செய்ய விரும்புகிறேன் எனவும் எனது மடலில் குறிப்பிட்டிருந்தேன். இந்த சந்தர்ப்பத்தை முழுமையாகப் பயன்படுத்தி மக்களின் ஆன்ம தாகத்தைத் தீர்க்க வேண்டியது பங்குத் தந்தையர்களின் கடமையாகும்.

மக்கள் ஆலயங்களில் பெரிய எண்ணிக்கையில் கூட முடியாத சூழ்நிலையிது. இது ஆலயத் திருவிழாக் காலம். எனவே மக்களுக்கு ஆன்மீக வழிகாட்டலைத் தொடர்ச்சியாகக் கொடுக்க தொடர்பாடல் சாதனங்களை நாம் எவ்வாறு முழுமையாகப் பயன்படுத்தலாம். எனும் நோக்கில் ஏப்ரல் மாதம் சிறப்புக் கூட்டம் ஒன்றை நான் ஒழுங்கு செய்தேன். Holy Mary Channel, முகநூல் (Facebook), வலையொளி (Youtube), புலனம் (Whatsapp) போன்றவற்றை நாம் பயன்படுத்துவது என முடிவு செய்தோம்.

இதன்படி முகநூல்(Facebook) மூலமாகவும், வலையொளியிலும் (Youtube), மரியன்னையின் வணக்க மாதம் பற்றிய வழிகாட்டலை நாம் கொடுத்தோம். அருட்தந்தை ரஜீவா தமது முகநூல் (Facebook) மூலமாக குருக்கள், சிறிய குருமட மாணவர்கள் திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களின் உதவியுடன் மரியன்னையின் காட்சிகள், பிரார்த்தனை, புதுமைகள் பற்றி தெரியப்படுத்தினார். அதேபோல அருட்தந்தை டக்ளஸ் ஜேம்ஸ் அடிகளாரும் மரியன்னை பற்றிய நல்ல பல விடயங்களை தனது முகநூலில் (Facebook) பதியச் செய்துள்ளார். திருப்பலி, நற்கருணை ஆராதனை, செப வழிபாடும் நடைபெற்றது.

பெந்தக்கோஸ்து பெருவிழாவை முன்னிட்டு அருட்தந்தை மதுராங்கன் 9 நாள் ஆயத்தங்கள், இறைவார்த்தை வழிபாடு, இறுதிநாள் வழிபாடுகளை குருக்களின் உதவி பெற்று நடாத்தினார். இதுபோன்ற பல ஆன்மீக நிகழ்ச்சிகளை காலத்தின் தேவைக்கேற்ப நடாத்தி வருகின்றோம்.

**ஆ. சமூகப்பணி**

"கொரோனா தொற்று" காலத்தில் மக்களின் தேவையறிந்து உலர் உணவுப் பொருட்கள், பால்மா பெட்டிகள் கொடுத்து பங்குத் தந்தையர்களும் நாமும் உதவியுள்ளோம். இப்பணி தொடரும்.

**16. கத்தோலிக்க பாடசாலை மாணவர்களின் வளர்ச்சி எந்த நிலையில் உள்ளது? ஓ/எல், ஏ/எல், தரம் - 5 பரீட்சைப் பெறுபேறுகளின் புள்ளிவிபரங்கள் ஏனைய பாடசாலைகளின் மதிப்பீடுகளுடன் திருப்தியானதா?**

இக்காலத்தில் கிறிஸ்தவ ஆசிரியர்கள் புலனம் (Whatsapp) மூலமாக தொடர்பில் இருந்து பல விடயங்களைப் பகிர்ந்து உற்சாகப்படுத்தி மாணவர்களை பல வழிகளில் வழிநடத்தியுள்ளனர். சிலர் தமது ஆக்கங்களை வெளியிட்டும் உள்ளனர். அனைவரையும் நான் பாராட்டுகின்றேன்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முன்னேற்றம் காண நான் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன். பங்கு மட்டத்தில் தமது மாணவர்களின் கல்வி நிலையைக் கண்காணிக்கவும் தேவையான முன்னெடுப்புகளைச் செய்யவும் "கல்விக் குழு" ஒவ்வொரு பங்கிலும் உருவாக்கப்பட வேண்டும் எனவும் கூறியிருந்தேன். இவற்றை செயல்படுத்தி சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தும்போது மாணவர்களின் பெறுபேறுகளிலும் மாற்றம் காண முடியும்.

இறுதியாக, எனது ஐந்து வருட ஆயர்த்துவப் பணியில் என்னோடு ஒத்துழைத்தவர்கள் பலர். பாராமுகமாக இருந்தவர்கள், ஒத்துழைக்க மறுத்தவர்கள், பிழை கண்டுபிடிப்பதிலேயே குறியாக இருந்தவர்கள், தவறாது செபித்தவர்கள் அனைவருக்கும் எனது நன்றி. எதிராக செயல்பட்டவர்கள் பெரும் பங்களிப்பு செய்துள்ளார்கள். நான் வெற்றிகளில் மட்டும் இறுமாப்படையாதவாறு இருக்கவும், எனது மகிமைக்காக அல்ல, இறைவனின் மகிமைக்காகவே என்பணி என்பதை உணர்ந்து செயல்படவும் என் தவறுகளை உணர்ந்து பணிவோடு ஏற்று திருந்தவும், சரியான மனநிலையோடு செயல்படவும் உதவியவர்கள் இவர்களே. எனது விசேட நன்றி.

"உங்களுக்கு நான் ஆயன், உங்களோடு நான் ஒரு கிறிஸ்தவன்" எனும் புனித அகுஸ்தினாரின் வார்த்தைகளுக்கமைய நானும் மனிதனாக தவறுசெய்யக்கூடியவன்.

எனது பராமரிப்பில் கொடுக்கப்பட்டுள்ள மந்தைகளின் வாடையை எப்போதும் அறிந்து நல்ல மேய்ப்பனாக எனது எண்ணம், மனநிலை, சொல், செயல்களில் தவறாமல் பணிவோடு இறைபணியைத் தொடர எனக்காக உங்கள் நாளாந்த செபத்தில் நினைவுகூறும்படி தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

**இறைவன் எம்பணியை எப்போதும் ஆசீர்வதிப்பாராக.**

செவ்வி கண்டவர் - செல்வி. கிறிஷாந்தா குருஸ்

# 05 ஆண்டுகள் நிறைவு

## நன்றிக் கொண்டாட்டம்

மகிழ்ந்து கொண்டாடிய
திருமலை மறைமாவட்ட
திருஅவை



ஜூலை 25, 2020 சனிக்கிழமை ஆயர்த்துவப் பணியில் 05 ஆண்டுகளை நிறைவுசெய்யும் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவல் ஆண்டகை அவர்களின் நன்றித்திருப்பலியும், மகிழ்வுப் பகிர்வும் வெல்வெரி புனித யாகப்பர் ஆலயத்தில் இடம்பெற்றது. விழா ஏற்பாடுகளை மறைமாவட்ட பொருளாளர்-தந்தை S.S. ஜோன்பிள்ளை அடிகளார் தலைமையேற்று மேற்கொண்டிருந்தார்.

நன்றித்திருப்பலியின் அனைத்து வழிபாட்டு ஒழுங்குகளையும் மறைமாவட்ட வழிபாட்டு ஆணைய இயக்குனர்-தந்தை I. யூட் சர்வானந்தன் அடிகளார் முன்னின்று நடாத்தினார். நன்றித்திருப்பலியில் மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள், துறவிகள் பங்கேற்றிருந்தனர். கொவிட்-19 பாதுகாப்பு நடவடிக்கை காரணமாக குறிப்பிட்டளவு பொதுநிலையினரே இந்நிகழ்வுகளுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். நன்றித்திருப்பலியைத் தொடர்ந்து கேக் வெட்டி மகிழ்வுப்பகிர்வு விருந்து நடைபெற்றது.

மறைமாவட்ட செய்தியாளர்.

பின்னாலிருந்து நீ விமர்சிக்கப்பட்டால் நினைத்துக்கொள், நீ முன்னால் இருக்கிறாய் என்று - ஹிட்லர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவும் ஆலய மணிகளும்

## ஆசிரியர் பேனா

## டிங் டாங் ➡ திக் திக்


அனைவருக்கும் வணக்கம்!

இப்போதெல்லாம் எந்த ஊரிலிருந்து அழைத்தாலும், எந்த நாட்டிலிருந்து பேசினாலும் அனைவரும் மறக்காமல் கேட்பது: "உங்கட ஊர்ல கொரோனா எப்படி?" விரும்பியோ விரும்பாமலோ அனைவரினதும் தற்கால பேசும்பொருளாகிப்போன இவ்வுயிர்க்கொல்லி நோய் பல புதிய வாழ்க்கை நடைமுறைகளையும் நம்மிடையே புகுத்திவிட்டது. உள்ளிருத்தல், தனிமைப்படுத்தல், சமூக இடைவெளி, சனிட்டைசர், முகக்கவசம், கெமிக்கல் தெளித்து சுத்தம் என்று நம் அன்றாட வாழ்விற்கு கொவிட் 19 அறிமுகம் செய்திருக்கும் வாழ்வியல் செயற்பாடுகளின் விபரப்பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது. எதற்காக இவையெல்லாம் என்று கேட்டால் நம் பாதுகாப்பிற்காக, நோய்ப்பரம்பலைத் தடுப்பதற்காக என்று மருத்துவத்துறையும், அரசாங்கங்களும் அடித்துச் சொல்கின்றன.

ஆனால் நம் திருஅவையும், ஆலயங்களும் என்ன சொல்கின்றன? குறிப்பாக சில பங்கு ஆலயங்களைப் பார்த்தால் "கொவிட்-19னா! அதெல்லாம் எமக்கு ஜுஜுபி!" என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம் பாணியிலும், "கொரோனா ஒரு சாதாரண காய்ச்சல்" என்று பிரேசில் நாட்டின் அதிபர் ஜாயிர் போல்சானரோ ஸ்டைலிலும் ஆபத்தான நிலைமையை அசமந்தமாய்க் கலாய்ப்பது போல் உள்ளது. ஆலயவளாகத்தைச் சுற்றி கொரோனா அண்டாத லேசர் வேலி போட்ட கணக்கா "எல்லாம் வழமைபோல் நடைபெறும்" என்பது மட்டுமே நாம் காணக்கிடைக்கும் வார்த்தையில் வராத அறிவிப்பாயிருக்கிறது.

நம் இலங்கை தேசத்தில் கொவிட்- 19 பரம்பல் வேகமெடுத்த 2020 பங்குனி மாதம் முதற்கொண்ட காலப்பகுதியில் எம் சில ஆலய நிர்வாகங்களின் அலப்பறைகள் வேற லெவல்.

அனைத்து இடங்களிலும் ஊரடங்கு அறிவித்து, செயற்படுத்தப்பட்டு, வழிபாடுகள் ஆலயங்களில் தடைசெய்யப்பட்டிருந்த காலங்களிலும் சில பங்குகளில் அடக்க முடியாமல் வெடித்துக்கிளம்பின வழிபாடுகளும், திருப்பலிகளும், ஆராதனைகளும். கலாபனை காலத்து கத்தோலிக்கர் போல தம்மை அடையாளப்படுத்திய சில ஆலய நிர்வாகங்களின் அட்ராசிட்டிகள் த்ரில் சினிமா ரகம்.



போலீஸ் ரோந்து, ராணுவ கண்காணிப்பு, அரசாங்க எச்சரிப்பு என அத்தனையையும் தாண்டி திருப்பலிகளை நிறைவேற்றிவிட்டு சில பக்தர்கோடிகள் ஆலயத்தை விட்டு வெளியே வந்தபோது தங்களையும் மறைசாட்சிகள் பட்டியலில் சேர்த்து கத்தோலிக்க நம்பிக்கையை காப்பாற்றிய சிலுவைப்போர்வீரராக திருச்சபை அங்கீகரித்ததைப் போன்ற வெற்றிக்களிப்பு அவர்கள் முகங்களில்.

"இவ்வளவு போலீஸ் நிக்குதே, இலங்கை அரசாங்கம் சட்டம் போட்டுள்ளதே, நோய் மக்களுக்குப் பரவும் அபாயம் உள்ளதே" என்று அவர்களைக் கேட்டால் "ரிஸ்க் எடுக்கிறதெல்லாம் எங்களுக்கு ரஸ்க்கு சாப்பிடுறமாதிரி" என்பதுபோல் பொறுப்பற்றவர்களாகப் பதிலளிக்கிறார்கள்.

அடக்க முடியா இவர்களின் விசுவாசத் தாகத்தைப் பார்த்தும், நோய்த்தொற்றின் அப்போதைய நிலையை வைத்தும், இலங்கை அரசும், மருத்துவத்துறையும்: சரிங்க ஊரடங்கு தளர்த்தியாச்சு, திருப்பலிக்கொண்டாட்டங்களுக்கும் வழிபாடுகளுக்கும் அனுமதி தந்தாச்சு, இருந்தாலும் உங்கள் ஒன்றுகூடல்களில் நோய்த்தொற்றின் சமூக பரம்பலை கட்டுப்படுத்தும் வகையில் ஆலய ஒன்றுகூடல்களை ஒழுங்கு செய்யுங்கள் என்று மன்றாடிக்கேட்டது. இலங்கை ஆயர் பேரவையும் திருவழிபாட்டுக்கொண்டாட்டங்களில் பின்பற்றக் கூடிய சகல ஆலோசனைகளையும், கூடிப்பேசி முன்வைத்தது, அறிவிப்புக்களையும் செய்தது.

கேட்பார்களா நம் நவீனகாலத்து "மறைசாட்சிகள்!" மள மளவென்று பலிகளை ஒப்புக்கொடுத்தார்கள். வழிபாடுகளை ஒழுங்கு செய்தார்கள். ஆலயத்திற்கு வெளியே முகக்கவசம், உள்ளே தலைக்கவசம் (நெற் போடாட்டி தேவநற்கருணை வழங்க இயேசு தடைவிதித்துள்ளாரே!!!). தொடுகைபற்றியெல்லாம் கவலையில்லை! நற்கருணையை கையில் வழங்கலாம் என்று இலங்கை ஆயர் பேரவையே ஆலோசனை அளித்திருந்தபோதும்; அதெப்படி பொதுநிலையினர் ('பாவிமக்கள்' என்றும் மொழிபெயர்க்கலாமோ???) கைகளில் நற்கருணையைத் தொடுவது என்று தெய்வக்குற்றமாகாதவாறு நாவிலேயே நற்கருணை வழங்கிய புனித பணியாளர்களை நாம் என்ன சொல்லிப் பாராட்டுவது!!!

திருப்பலிக்காய் அழைக்கும்போது இயேசு மக்களுக்காய் உயிர்கொடுத்தார் என்று சொல்லி ஒலிக்கும் இவ்வாலய மணிகள் ஏனோ உயிர்க்கொல்லி நோய்த்தொற்றினால் மக்களின் உயிர்போகும் அபாயம் உள்ள இந்நாட்களில் கொஞ்சம் அமைதிகாத்து நற்செய்தியின் சாட்சியாக மாற மறுக்கின்றனவோ?

அன்பு நண்பர்களே, நம்பிக்கையாளர்களே! உங்கள் ஒன்றுகூடல்கள் உயிரெடுப்பதாய் இல்லாமல், உயிரளிப்பதாய் இருக்குமாறு ஆலய வழிபாடுகளை வழிப்படுத்துங்கள். ஆலயத்துள் மட்டுமல்லாது, வீதியெங்கும் தேடிச்சென்று ஆதரவற்றோரையும், ஏழைகளையும், எதுவுமற்றோரையும் பிரதிபலன் பாராது ஆசீரளித்து, குணமளித்து அன்பு செய்த ஆண்டவரை இக்காலத்தில் மீண்டும் மக்கள் காணச்செய்யுங்கள். இயேசுவைச் சந்திக்க வீட்டிற்குள் வந்தபோது (மாற்கு 1,29. 32-33: 2,1-12) மக்கள் ஒவ்வொருவரும் சுகத்தையும், வாழ்வையும் பெற்றது போன்று ஆலயத்திற்கு வரும் ஒவ்வொருவரும் நோய்த்தொற்றிற்கு உள்ளாகாதவாறு பாதுகாப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்துங்கள். அரசின், மருத்துவதுறையின் அறிவிப்புக்களை மதித்து மக்களைக் காப்பாற்றுங்கள் என உங்களை வேண்டி வாழ்த்துகின்றேன்.

ஆசிரியர்

---

உங்களுக்கான பகுதி

## தீபத்தின் ஒளியில்

**இயேசுக்கிறிஸ்துவில் இணைந்த விசுவாசப்பயணத்தில்**

உள்ளத்தை உறுத்தும், உசுப்பும், ஊசலாடச்செய்யும்

**உங்கள் கேள்விகள்**

**உங்கள் சந்தேகங்கள்**

**உங்கள் தேடல்களை**


வினாக்களாக எமக்கு எழுதுங்கள், குறிப்பிட்ட துறைகளில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்கள், பணிப்பொறுப்பிலுள்ளோர் விடைதரக் காத்திருக்கின்றார்கள்.

*"கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும் தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும் தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள்" (மத்தேயு 7,7)*

---

## தரணியெலாம்

## எங்கள் தாயகமாம்



• நாங்கள் வாழும் எவ்விடமும்
நமது தாயகமெனக் கொண்டே
நாங்கள் வாழும் போது அங்கு
நம்மை அறியாப் பற்று அங்கே
நம்மோடு இணைவது உறுதியாகும்.

• இறைவன் படைத்த உலகு இது
எங்கும் இறைவனைக் காணுகின்றோம்
நம்மோடு வாழும் மக்களை நாங்கள்
அன்போடு ஏற்று வாழும் போது
உண்மையில் அன்பான உறவுகளை
காண்போம் நமது வாழ்வினிலே

• மதங்களைக் காட்டிய உடைவுகள்
மொழிகளைக் காட்டிய பேதங்கள்
இனங்களைக் காட்டிய வேற்றுமைகள்
இதை ஏற்கவே முடியாது வாழ்வினிலே
எம்மதமும் தீமைக்கு வழிகாட்டவில்லையே
எம்மொழியும் அதையே கூறிடுமே
நன்மைகளை நாம் விரும்பித்தேடும் போது
நாம் வாழும் மண்ணே நமது பெருமைகள்
சொல்லும்.

• பிளவுகள் உடைவுகள் பேதங்கள் வந்தால்
அன்பது அங்கே மறைந்து போகுமே
அன்பின நிலைகளை நாம் தொடராமல்
அன்பே நமக்கு அழத்தளமென்று
நாமிதை உணர்ந்து செயற்படும் போது
உண்மையில் நம்வாழ்வு
உயர்விளைக்காணுமே

*அருட்பணி. என்.சி. அருள்வரதன்*

---

வெற்றி பெறுவது எப்படி என்று யோசிக்காமல் நீ தோல்வி அடைந்தது எப்படி என்று யோசித்துப் பார், நீ கண்டிப்பாக வெற்றி அடைவாய் - ஹிட்லர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன கால கிறிஸ்துக்களாக மாறும் தாதிய பணியாளர்கள்

திருமதி. K. அலோசியஸ் ,
ஓய்வுபெற்ற அதிபர் - தாதியர் பயிற்சிக் கல்லூரி,
மட்டக்களப்பு

கொவிட்-19, இதுதான் என்று உலகளாவிய ரீதியில் 216 நாடுகளில் பரவி மரணத்தையும், மரண பயத்தையும் ஏற்படுத்தி கிட்டத்தட்ட ஒரு கோடி மக்களை பாதித்து, ஏறக்குறைய 6 லட்சம் மக்களின் உயிரைக் காவுகொண்ட கொடிய வைரஸ் தொற்று நோய் என்பது பலரும் அறிந்த உண்மை. கொரோனா என்னும் கொடிய வைரஸ் பல படிகளில் தரம் பிரிக்கப்பட்டு அதன் கொடூரமான தாக்கம், மிக விரைவான பரவல், மரண அவஸ்தை என்பதைக் கண்டறிந்து 2019 மார்கழியில் இருந்து இன்று வரை ஓயாத அலையாக விளக்கங்கள், வரைவுகள், கணிப்புக்கள் மற்றும் பாதுகாப்பு முறைகள் பற்றிய அறிவுறுத்தல் உலகின் பல திசைகளில் இருந்து பல கோணங்களில் வெளிவந்து கொண்டே இருக்கின்றன.

இக்கொடூர நோயிலிருந்து உலக மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு உலக சுகாதார ஸ்தாபனத்திற்கும் அந்தந்த நாட்டுத் தலைவர்களுக்கும் உரியதாக இருந்தாலும் உட்கருக்களாகச் செயற்படும் சுகாதாரப் பிரிவின் பணியாளர்களின் சேவை மகத்தானது. சுகாதாரத் துறையின் அனைத்துப் பிரிவுகளிலும் தாதியப்பணி மிக மிக உன்னத நிலையில் இருப்பதை எவரும் மறுக்க முடியாது.

காரணம், இருபத்திநான்கு மணிநேரமும் நோயாளர்களின் அருகில் இருந்து பணிபுரியும் தலையாய பொறுப்பு மட்டுமன்றி, நோயாளர்களை மிக நெருக்கமாகக் கையாண்டு அவர்களது உடல் உள சுகத்தில் மட்டும் அக்கறையாக தம்மை மறந்து தம் உயிரையும் துச்சமாக நினைத்து சேவை செய்யும் தாதியப் பணியாளர்களிற்கு நாம் தலைவணங்க வேண்டும். தத்தமது நாடுகளின் சுகாதார மேம்பாட்டிற்காகவும், தம் இனத்தைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காகவும் குடும்பங்களைப் பிரிந்து தொடர்ச்சியாக நீண்ட நாட்கள் வைத்தியசாலையே தஞ்சமென சேவை செய்த தாதியர்களைப் பற்றிய செய்திகள் மனவேதனையைத் தருகின்றது.

நோய்த் தொற்றினால் மரணத்தைத் தழுவியவர்களின் எண்ணிக்கை மேலெழுந்து அதிர்ச்சியையும், ஆதங்கத்தையும், வேதனையையும் தந்துகொண்டிருக்கும் அதே வேளையில் அவர்களைப் பராமரித்த சுகாதாரப் பணியாளர்களின் மரண எண்ணிக்கையில் தாதியரின் எண்ணிக்கை மேலோங்கிநிற்பது வேதனையுடன் கூடிய சாதனை என்றே கூறவேண்டும்.

இவர்களுக்காக நாம் ஒருமுறை அல்ல உயிருள்ளவரை தலைவணங்க வேண்டும். தாதியப் பணியாளர்களின் சேவை மகத்தானது மட்டுமல்ல மறக்க முடியாதது என பிரித்தானியப் பிரதமர் நன்றி தெரிவித்த காணொளியைக் கண்டு தாதியர்கள் பெருமையடையும் அதே நேரத்தில் உள்ளத்தைத் தைக்கும் உருக்கமான செய்திகள் பல வெளியாகிக் கொண்டே இருக்கின்றன.




பசி தாகம் மறந்து ஓய்வின்றி மூன்று நாட்கள் கொவிட்-19 நோயாளர்களுக்காக தொடர்ச்சியாக சேவைகள் செய்து, சுருண்டு விழுந்து உயிரிழந்த 23 வயது ஒரு ஆண் தாதி, நோயின் தொற்றுக்குள்ளாகி அந்நோயின் வேதனைகளை அனுபவித்து உயிரிழந்த தாதியப் பணியாளர்கள் பற்றி சிந்தித்துப் பார்க்கும் பொழுது, இவர்கள் யார்? மனித நேயத்தினால் பாடுகளை அனுபவித்து சிலுவையைத் தாங்கி, இரத்தம் சிந்தி தன்னுயிர் கொடுத்த இயேசு கிறிஸ்துவின் அவதாரங்களா? இல்லை படிப்படியாக மறைந்து கொண்டே போகும் புனித தாதியப் பணிக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள நெருங்கிய பிணைப்பை மீளுயிர் கொடுக்கும் கடவுளின் திட்டமா? என சிந்திக்க வேண்டியுள்ளது.

தாதியப்பணி இன்று இந்நிலைக்கு உயர்வதற்கு அடித்தளம் அமைத்த கிறிஸ்தவ பெரியார்களைப் பற்றிய வரலாறுகள் இன்றளவும் அழியாதவையாக இருப்பினும், தற்கால தேவைகளின் நிமித்தம், தாதியப்பணி ஓர் ஊதியம் கருதி செய்யப்படும் தொழிலாக மாறியுள்ளமை மனவேதனையைத் தருகிறது. கோவில்களில் ஆரம்பமான தாதியப்பணியைத் தரமுயர்த்தி உத்தியோகம் என்ற ரீதியில் பலபடிகளில் மேம்படுத்தி, அதை கோட்பாடுகள் (theories), ஆராய்ச்சிகள் (researches) என்பவற்றின் ஊடாக மேலும் வளர்த்து, செய்திறன்களை மட்டுமன்றி இதய ஆழத்தில் அன்பு, இரக்கம், கருணை, ஆதங்கம் என்ற உன்னத உணர்வுகளையும் வளர்க்கும் விழிப்புணர்வுகளையும் தந்தவர்கள் கிறிஸ்தவ மிஷனரிமார்கள் என்பதை தாதிய வரலாறுகள் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இதுமட்டுமன்றி 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், அதாவது 1950களில் தாதியத்தைத் தரக்குறைவாக கணிப்பிட்ட ஒரு காலத்தில், கிறிஸ்தவ அருட்சகோதரிகள் (Rev.sisters), தாய்மார்கள் (Rev.mothers) மட்டுமே இப்பணியை முழுமனதுடனும், அர்ப்பணிப்புடனும் செய்துவந்தார்கள்.

எமது நாடாகிய இலங்கையில் தாதியப் பயிற்சிகள் அக்காலகட்டத்திலேயே ஆரம்பமானது. கிறீன் மெமோரியல் வைத்தியசாலை (Green Memorial Hospital) மானிப்பாய் மற்றும் மக் லியோட் வைத்தியசாலை (Mc Leod Hoespital) இணுவில் இவ் இரண்டும் கிறிஸ்தவ ஆலயங்களுடன் இணைந்த தனியார் வைத்தியசாலைகளாக அக்காலத்தில் காணப்பட்டன. இவை கிறிஸ்தவ பாரம்பரிய முறைகளுக்கமைய கிறிஸ்துவின் மனித நேயம், இரக்கம், கருணை மற்றும் தன்னலமற்ற சேவை என்பவற்றை தரமான முறையில் தாதியர்களுக்குப் பயிற்சியளித்து உயர்நிலைத் தாதியர்களை உதாரணப் புருஷர்களாக எமக்கு அளித்தது. இவர்களினால் பயிற்றுவிக்கப்பட்ட தாதியர்கள் காலப்போக்கில் அரச வைத்தியசாலைகளில் பணிபுரிந்து, பயிற்சியளித்து, வாழ்ந்துள்ளனர்.

ஒரு தேசத்தின் சுகாதார மேம்பாட்டிற்கு தாதியின் பங்கு அளப்பெரியது. தம் கடமைகளை பல படிகளில் நின்று கலை, விஞ்ஞானம் ஆகியவற்றைத் தழுவி நீதிநெறிக் கோட்பாடுகளுக்கு அமைய செய்யவேண்டிய வரையறுக்கப்பட்ட சேவைகளை மிகநுணுக்கமாக வழங்கிவருகின்றனர்.

எனினும் கொவிட்-19 பராமரிப்பில் பாதிக்கப்பட்டவர்களின் வேதனைகளைக் கண்டு தம்மை மறந்து தம் வரையறையை மறந்து சேவையில் தம் உயிரையும் அர்ப்பணித்த தாதியர்களின் செயலானது இயேசுவின் அன்புச் செயலுக்கு மீண்டும் உயிர்கொடுப்பதாய் அமைந்துள்ளது.

உடற்சுகத்தை மேம்படுத்துதல் (promotion of health), நோயிலிருந்து பாதுகாத்தல் (prevention of illness), வேதனைகளில் இருந்து விடுவித்தல் (alleviation of suffering) இழந்த சுகத்தை மீட்டுக் கொடுத்தல் (restoration of health) என்ற தாதிய தலையாய அடிப்படை எண்ணக்கருவுடன் அமைதியான மரணத்திற்கு உதவுதல் என்பதும் வலியுறுத்தப்பட்ட ஒரு பணியாகும். கொவிட்-19 நோயாளிகளுக்கான பராமரிப்பின்போது இறுதி நேரத்தில் இதயத்தைத் தூண்டும் உயிர்காக்கும் செயல்முறையைக் கண்டித்து அமெரிக்கத் தாதியொருவர் வாய்விட்டுக் கதறியழுது "போதும் அவர்களுக்கு வேதனை, அமைதியான மரணத்திற்கு விடுங்கள்" என்று கதறும் காணொளியைப் பார்த்துக் கண்கலங்காதவரில்லை.



இது இறையிரக்கத்தின் பிரதிபலிப்பு மட்டுமன்றி தாதியர் தம் பணியால் மனித நேயம் இன்னும் நம் மத்தியில் உயிர் வாழ்கின்றது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். தாதியத் தலைவி பிளரன்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale) அம்மையாரின் கனவு இந்நாட்களில் இத்தன்னலமற்ற தாதியப்பணியாளரின் அர்ப்பணிப்பினால் நனவாகிக் கொண்டிருக்கின்றது. இவ் உன்னத பணியாற்றும் ஒவ்வொரு தாதியின் சேவைக்காகவும் நாம் தினமும் இறைவனை வேண்டுவதுடன் வாழும் கிறிஸ்துக்களாக தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றும் ஒவ்வொரு தாதிய பணியாளரையும் போற்றிக்கொண்டாடுவோம்.

**தீபத்தின் வாசகர் கருத்துக்களுக்காக,**

நாம் வழங்கும் புதிய பகுதி

## நாங்களும் பங்காளிகள்



எம் பத்திரிகையின் பக்கங்கள்,
ஆக்கங்கள், போட்டிகள் தொடர்பான
உங்கள்

விமர்சனங்கள்
பாராட்டுக்கள்
கருத்துக்களை


அக்கறையுள்ள வாசகராய் எமக்கு எழுதுங்கள்

## சிறுவர்களுக்கான போட்டி முடிவுகள்

**சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள்**

பாங்குபற்றிய சிறார்கள் : 17 பேர்

1ம் பரிசு 500/- ரூபாய்
செல்வி. ரியோனா றொஜிலியோ
இல : 52, பற்றிமா வீதி,
திருகோணமலை



2ம் பரிசு 300/- ரூபாய்
வி. மர்வின்
இல : 109/5, நடராஜன் வீதி,
இலிங்கநகர்

3ம் பரிசு 200/- ரூபாய்
செல்வன். வீ. புமேரியன்
இக்பால் வீதி
மூதூர் - 07

வெற்றி என்பது புத்திசாலிகளின் சொத்தல்ல, அது முன்னேறத் துடிக்கும் உழைப்பாளிக்கும், தன்னம்பிக்கைக்குமே சொந்தம். ஹிட்லர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



• 'சக்கர இனிக்கிற சக்கர, இதில் எறும்புக்கு என்ன அக்கர......"
சக்தி FMஇல் இந்தப் பாட்டைக் கேட்டுக் கொண்டே அப்படியே நித்திரையாகிவிட்டேன்.......!!!
நடுநிசியில் ஒரு கனவு 'ராஜாதி ராஜா, ராஜ கம்பீர, ராஜ மார்த்தாண்ட, ராஜ புத்திர, ராஜ குலோத்துங்க எமதர்ம ராஜா வர்றார், வர்றார் என
எகத்தாளம் முழங்க, வந்துநின்ற எமன் முன்னால் ஒரு கூட்டம் மண்டியிட்டுக் கிடக்கிறது.
"இந்தக் கூட்டத்தினால் மானிட வர்க்கத்துக்கே அவமானம், வேதனை, வெட்கம்
இவர்கள் அனைவரையும் கருணைக் கொலை செய்யுங்கள்."
கர்ஜிக்கிறார் எமதர்மராஜா
'இவர்கள் செய்த குற்றம் என்னவோ' என சித்திரகுப்தன் விசாரிக்க
'இவர்கள் அனைவரும் சக்கரை (சீனி) வியாதிக்காரர்கள்'
என பல்லிளித்துப் பதிலளிக்கிறான் எமன்.
அந்தக் கோரச் சிரிப்பின் ஒலியிலே.......

• துடிதுடித்து பதைபதைக்க கண்விழிக்கிறேன்.
இருதயம் இடம்மாறித்துடிக்கின்றது.
காரணம் நானும் ஒரு நீரிழிவு நோயாளி.

• உரோமாபுரிக்குப் படிக்கச் சென்று என் உயிரை மட்டுமல்லாமல், என் உயிரிலும் மேலான தலை மயிரையும் கொடுத்துப் பட்டப் படிப்பை முடிப்பதற்கு உரோமை எனக்குத் தந்த செல்லப் பரிசு
- நீரிழிவு (சீனி வியாதி)

• தாய்நாடு வந்தவுடன் மட்டக்களப்பின் மாம்பழமும், பலாச்சுளையும் என்னை இருகரம் நீட்டி வரவேற்க வெளிநாட்டில் கிடைக்கவில்லையே
என்ற ஆதங்கத்திலும், அவாலிலும், கெலியிலும்
பன்டியிறைச்சி பிரட்டலை ஒரு பதம் பார்க்க
மாட்டிறைச்சி பொரியலை ஒரு பிடி பிடிக்க
இறாலையும், கூனியையும் குழைத்தடிக்க
நண்டு வறுவலை சட்டியோடு காலிபண்ண
ஐயகோ! அடிமட்டத்தில் கிடந்த நீரிழிவு, அப்துல் கலாமின் ஏவுகணை போல்விண்ணோக்கிப் பாய்ந்து.......
பிறகென்ன சொந்தக்கதை சோகக்கதைதான்

• ஐரோப்பாவில் இருந்தபோது அழகிய ஆப்பிள்போல் இருந்த உடம்பு சிறிலங்கா வந்த பின்னர்
பிழிந்த பேரீச்சம் பழம் போல் ஆனது
பழைய இரும்பு, பித்தளைக்கு பேரீச்சம்பழம் கொடுப்பார்கள்,
பாழாய்ப் போன இந்த பேரீச்சம்பழ உடம்புக்கு
எதைத்தான் கொடுப்பதோ

• 'காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா'
என்பதன் அர்த்தம் கொஞ்சமாய் புரியத் தொடங்கியது.
பால்ய வயதில் பதுங்கிப் போய்
சீனி போத்தலுக்குள் கையை விட்டதை நினைக்கையில்
அழுகை அழுகையாய் வந்தது......


• அப்புறமென்ன ஆசுபத்திரிதான்......
செக்கப்புக்காய் போய்நின்றேன்..... ஊசி குத்தி
இரத்தத்தை சோதித்தார்.
சோதித்த கருவியை பார்த்த டாக்டரின் கண்கள் அகல விரிந்தன.
கட்டிலில் கிடந்த என்னை ஒரு
தெள்ளுப் பூச்சியைப் போல் பார்த்தார்.
பக்கத்திலிருந்த நர்சம்மா ஒரு நமட்டுச் சிரிப்பு சிரித்தார்
கருவியை எட்டிப் பார்த்த மேல்நர்சம்மா
என்னை ஏளனமாய் பார்த்தார்.
போதாதற்கு, வாசலில் கிடந்த நாய் கூட
என்னை முறைத்துப் பார்த்தது.

• எனக்கு விளங்கிற்று மூளையில் டாப் என மணி ஒலித்தது
சிக்கித்தான் சிவணாண்டி என்று மட்டும் புரிந்தது
நீரழிவு வட்டத்துக்குள்ள ஒரு அடிமை சிக்கித்தான் என்பது புலனானது
மெல்ல தலையை உயர்த்தி டாக்டரைப் பார்த்தேன்
உங்களது Blood Suger 530ஐ தாண்டியது
இந்தநேரம் நீங்க கோமாவுலதான் இருந்திருக்கனும்.
கடவுள் தான் காப்பாத்தியிருக்கார் கவனமாக இருங்க......"

• டாக்டர் வாயிலிருந்து இத்திருவார்த்தையைக் கேட்ட நிமிஷத்திலே
எனக்கு பசானிலுள்ள 9ம் பிரசங்கம் தான் ஞாபகத்துக்கு வந்தது
"ஐயோ கிறிஸ்தவர்களே!
டாக்டரானவர் இவ்வசனங்களை திருவாய் மலர்ந்து பிரசங்கித்த வேளையிலே......
என் நா வறண்டு, கண்கள் மயங்கி, காதுகள் அடைபட
என் தலைமேலே யாரோ சம்மட்டியால் அடிப்பது போலும்
எனது எலும்புகளை ஒன்றோடொன்று பின்னிப் பிசைவது போலும் உணர
கெஸ்தமனியில் எம் பிரான் இயேசு அனுபவித்த கொடும் வேதனையை
அடியேனும் அனுபவிக்க கண்டீரோ.......!!!"

# நீரிழிவும் பேரிழிவும்

அருட்பணி. ஜீலியன்
மட்டக்களப்பு மறைமாவட்டம்.



• கெஸ்தமனி அனுபவத்திலிருந்த மீண்டபொழுது.....
வாட்டிலே 20ம் நம்பர் ரூமிலே 30ம் நம்பர் கட்டிலிலே
அடியேன் அனுமதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்தேன்.
ஆசுபத்திரி அனுபவமும் அலாதிதான்!
குளிசை தர வந்தவரிலிருந்து ஊசி போட வந்தவர் வரை ஒரே அட்வைஸ்தான்
அறையைப் பெருக்க வந்த அம்மாகூட என்னை விட்டுவைக்கவில்லை
கடைசியில் தான் நான் காண்டானேன், ஏனென்றால்
கக்கூஸ் கழுவ வந்த ஐயா சொன்னர் ஒரு வார்த்தை பாருங்கோ!
'எப்படி இருந்த நீங்க, இப்படி ஆயிற்றிங்களே பாதர்......"
அட கடவுளே வாய்க்கு ருசியா சாப்பிட்டது ஒரு குத்தமாடா?
'ஓ' என்று கதறி அழவேண்டும் போலிருந்தது, அதுவும் முடியவில்லை
அப்படிச் செய்தால் ஒருவேளை அங்கொடைக்கு அனுப்பி விடுவார்கள்.
அமைதி காப்பதுதான் நல்லது
ஏனென்றால் சீனிக்கு நான் ஒரு 'புதிய வரவு'
இதுதான் இனி வாழ்க்கை என்றால் ஏற்றுக் கொள்ள வேண்டியது தானே

• அலாதியான அனுபவங்கள் ஆசுபத்திரியில் நிறைவுற வீடு வந்து சேர்ந்தேன்
பார்க்க வந்த ஒவ்வொருவரும் எனக்கு M.B.B.S டாக்டராகவே தெரிந்தனர்.
- [ ] காலையிலே பயறு வெந்தயம் ஊற வச்சிக் குடியுங்கோ.....
- [ ] வெள்ளை அரிசியை கிட்டயும் எடுக்காதீங்கோ....
- [ ] குறிஞ்சா, திராய் இலைவகைகள் அதிகம் சாப்பிடுங்கோ
- [ ] ஒரு நாளைக்கு ஒரு துண்டுப் பழம் தான் ருசியுங்கோ
- [ ] இன்சுலின் இலையை நல்லா சப்பி சாப்பிடுங்கோ
- [ ] கொய்யா இலையை தொடர்ந்து சாப்பிடாதீங்கோ......

அப்பப்பப்பா........ ஏராளம்........ ஏராளம்.
பேசாமல் குரங்காவே பிறந்திருக்கலாம் என்ற எண்ணம் என்னுள் லேசாய் தோன்றி மறைந்தது.

• நடந்த சம்பவம் தெரியாத ஒரு சிலர் என்னைக் கண்டபோதுஅட்டகாசமாய் விசாரித்தார்கள்
"என்ன பாதர் ஜிம் செய்யுறீங்களா? உடம்பு மெலிஞ்சிருக்கு"
அட கிறுக்குப் பய புள்ளைகளே!
மனிசன் கோதாரியால அவதிப்படுவது
உங்களுக்கு எங்கடா புரியப்போகுது.
பேசாம வேலையைப் பார்த்திட்டு போவியா!!!
(உள்ளக் குமுறல்)

• இது இப்படி இருக்க, ஒரு நாள் பூசைக்கு வெளியே சென்றேன்.
அன்பர் ஒருவர் என் அருகில் வந்தார்
உச்சந் தலைமுதல் உள்ளங்கால் வரை என்னை
X' Ray எடுத்தார்.
'என்ன பாதர் சுகரா' என்று கேட்டார்.
ஆமிக்காரன் விசாரணையில் கூட நான்
அப்படிப் பயந்ததில்லை, இருப்பினும்
ஆம் என்று தலையை ஆட்டினேன்.
அவ்வளவுதான் தாமதம்
ஒரு பக்கமாக என்னை கூட்டிச் சென்று
விசாரணையை ஆரம்பித்தார்.
- [ ] உடம்பு வியர்க்குதா பாதர்? கை, கால் நடுங்குதா?
- [ ] இரவுல நித்திர எப்படி? கண்பார்வை Okeya?
- [ ] அடிக்கடி மயக்கம் வருதா???

ஐயா! சுவாமி.... உங்கட கேள்விகளாலதான் எனக்கு இதெல்லாம்
நடக்கும் போல கிடக்கு..... ஆள விட்டாப் போதும்


• சமூக வலைத்தளத்தை திறந்தாலே சக்கரை வியாதியின் அலப்பறைகள்தான்
- [ ] இந்நோயாளிக்கான காலுறை, கையுறை, பாதணி, உடுப்புகள் ஒருபுறம்
- [ ] Diabetic சீனி, தேயிலை, பால்மா, அரிசி, தின்பண்டங்கள் மறுபுறம்.
- [ ] அதுபோக இதற்கான குளிசைகளும், மருந்துகளும் ஏராளம், ஏராளம்

கேட்டால் இது ஒரு பணக்கார வியாதியாம்
அதுவும் சரிதான்
இவ்வளவிற்கும் செலவு செய்து நோயாளி ஓட்டாண்டியாக, கம்பனிகள் எல்லாம் நன்றாக கொழுத்துத்தான் போகின்றன.

• கிட்னி சட்னியாகிவிடும், கல்லீரல் காணாமல் போயிடும் எலும்புகளும் கரைந்துவிடும், கடைசியில் இதயமும் நின்றுவிடும் என்று சொல்லி சொல்லி
கடைசிவரையும் பயத்தோடே படுக்க வைக்கிறார்கள்.
பலரது பயம் சிலருக்கு மூலதனம், மாற்ற முடியாத் உலகின் தலைவிதி. • பெரும்புயலின் பின் தென்றல் வீசுவது போல்
நேற்று ஒரு நண்பரைச் சந்தித்தேன்
இதமான வார்த்தைகளால் இதயத்தை வருடிவிட்டார்
நோய் பற்றிய கவலையை முற்றாக நீக்கவும்
உணவுக் கட்டுப்பாட்டை ஓரளவு பின்பற்றவும்
மருந்து மாத்திரைகளை கண்ணியமாய் கையாளவும்
மனதின் மகிழ்ச்சியை தொலைத்து விடாமல் பார்க்கவும்
எண்ணம் போல் வாழ்கை என்பதை எளிதாகச் சொல்லிச் சென்றார்.

• ஆகையால் என் நீரிழிவு சகாக்களே! இங்கே கருத்துச் சொல்ல நான் வரவில்லை
என் மனதில் பட்டதையே பிட்டுப் பிட்டு வைத்தேன்
கூடிய கவலையும் வேண்டாம், குறைந்த பராமரிப்பும் வேண்டாம்
உணவே மருந்து, நலமே வாழ்க்கை

நீரிழிவை பேரிழிவாக்காமல் நிம்மதியாய்
வாழ்வோம்......!!! வாழவிடுவோம்....!!!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபத்தின் ஒளியில்...

## உங்கள் கேள்விகளுக்கு எங்கள் பதில்கள்

**01. திருப்பலி வேளைகளில் இடம் பெறுகின்ற சில நிகழ்வுகள் பங்குக்கு பங்கு வேறுபட்டதாக, வித்தியாசமான முறைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. கத்தோலிக்க திருஅவையில் அனைவரும் ஒரே திரு அவையாக, முழுச்சமூகமாக பங்களிப்புச் செய்ய ஒரே வகையான வழிபாட்டு ஒழுங்குகளை கடைப்பிடிப்பது சிறந்ததல்லவா?**

***பதில் :*** அன்பார்ந்த வாசகரே.

திருவழிபாடு தொடர்பாக எழுதப்பட்ட வினாக்களுக்கு பதிலளிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். திருப்பலியின் போது நிகழ்கின்ற காணிக்கைப் பவனி, ஆசீர் நீர் தெளித்தல் பங்கு அறிவித்தல் ஆகியவற்றை குறித்து விளக்கம் தர நான் விளைகின்றேன்.



முதலாவதாக முழுமையான திருவழிபாடு என்பது என்ன என வரைவிலக்கணப்படுத்த மூன்று விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

1. இயேசுவின் பாஸ்கா மறைபொருளின் முழுமையை கொண்டாட வேண்டும்.
2. அனைவராலும் பின்பற்றப்படுவதாக இருத்தல் வேண்டும்.
3. திருஅவையினால் அங்கீகரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும் இதனடிப்படையில் முழுமையான திருவழிபாட்டு கொண்டாட்டம் மூன்று மாத்திரமே உண்டு. அவை,

- திருப்பலி
- திருப்புகழ்மாலை
- திருவருட்சாதனங்கள்

இவற்றை தவிர்ந்த ஏனையவை பக்தி முயற்சிகளாக கருதப்படும். பக்தி முயற்சிகளில் மாற்றங்களை நிகழ்த்த அல்லது படைப்பாற்றலை வெளிப்படுத்த இறைமக்களுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் முழுமையான திருவழிபாட்டு கொண்டாட்டத்தில் எவ்வித மாற்றங்களை நிகழ்த்த முடியாது.

**02. காணிக்கைப் பவனியின்போது முதலில் அப்ப இரசப்பாத்திரம், தண்ணீர், இரசக்கிண்ணம் அதனைத் தொடர்ந்து ஏனையவற்றை காணிக்கையாக வழங்குவதா, அல்லது இறைமக்கள் வழங்கும் காணிக்கைப் பொருட்கள் திருப்பலியில் சேகரிக்கப்படும் காணிக்கைப்பணம் ஆகியவற்றின் பின் தண்ணீர், இரசக்கிண்ணம், அப்ப இரசப்பாத்திரத்தை குருவானவரிடம் கையளிப்பதா? எது சரியானது?**

***பதில் :*** திருப்பலியின் முதன்மையான இரு பகுதிகள் இறைவார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு ஆகும். இதிலே காணிக்கை பவனியானது அத்தியவசியமானதொன்றாக கருதப்படாது. உரோமைத் திருப்பலி நூலின் பொதுப்படிப்பினைகள் எண் 73:140 இவ்வாறு கூறுகின்றன.

பீடம் தயாரிக்கப்பட்டதன் பின் காணிக்கைப் பொருட்கள் கொண்டுவரப்படுகின்றன. நம்பிக்கையாளர் அப்பத்தையும் இரசத்தையும் காணிக்கையாகக் கொடுப்பது பாராட்டுக்கு உரியது. முற்காலத்தில் நடந்தது போல இன்று நம்பிக்கையாளர் தங்கள் உடைமைகளிலிருந்து திருவழிபாட்டுக்காக அப்ப, இரசத்தைக் கொண்டுவருவதில்லை. என்றாலும் காணிக்கைப் பொருள்களைக் கொண்டுவரும் சடங்கு இன்றும் ஆன்மீக ஆற்றலும் பொருளும் கொண்டுள்ளது. மேலும் ஏழைகளுக்காகவும் திருஅவைக்காகவும் நம்பிக்கையாளர் கொண்டுவந்த அல்லது கோவிலில் காணிக்கையாக எடுக்கப்பட்ட பணத்தையும் மற்றக் கொடைகளையும் ஏற்றுக் கொள்ளலாம் இவற்றை பலிபீடத்துக்குப் புறம்பே தகுந்த இடத்தில் வைக்க வேண்டும்.

காணிக்கைப் பவனியின் போது அப்ப, இரசம் முதன்மையான காணிக்கையாக கருதப்படும். ஏனெனில் இவை இயேசுவின் கல்வாரிப் பலிப்பொருளாக ஒப்புக்கொடுக்கப்படுகின்றன. எனவே காணிக்கைப் பவனி அப்ப, இரசம் இன்றி முழுமை பெறாது. இதனடிப்படையில் பவனியின் முதலில் அப்ப, இரசம் கொண்டுவரப்படும். ஏனெனில் திருப்பலியின் முதல் தேவையாகக் காணப்படுவது அப்ப, இரசம் ஆகும். காணிக்கை பவனியில் இரசக் கிண்ணம் கொண்டுவரப்படுவதில்லை. ஏனெனில் இரசக் கிண்ணம் ஓர் காணிக்கைப் பொருளல்ல.

காணிக்கைப் பொருள் ஏழைகளுக்கும், திருஅவைக்கும் பயன்படுத்தப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும். அடையாளக் காணிக்கைகள் வழங்கப்படக் கூடாது மக்களிடம் சேகரிக்கப்பட்ட பணம் பவனியில் கொண்டுவருவது சிறந்ததாகும். ஆனால் சில ஆலயங்களில் சூழ்நிலைக்கு ஏற்ப நாம் செயற்படலாம். (உதாரணம்) திருத்தலங்கள், பெருவிழாக்கள், இறைமக்கள் பெருமளவு கூடும் திருப்பலிகளில் இது சாத்தியமற்றதாகும்.



**03. ஆலயத்தில் ஒன்று கூடியுள்ள இறைமக்களுக்கு குருவானவரால் ஆசீர்நீர் தெளிக்கப்பட்டு அதன் பின் திருப்பலியை ஆரம்பித்தல்/ திருப்பலியின் இறுதியில் ஆசீர்நீர் தெளித்தல்/திருப்பலியின் ஆரம்பச் செபவேளையில் பலிப்பீடத்தில் வைத்து குருவானவரால் தண்ணீர் ஆசீர்வதிக்கப்பட்டு அதனை இறைமக்கள் மேல் தெளித்தபின் திருப்பலியினை தொடர்ந்து ஒப்புக்கொடுத்தல், இதில் எது சரியான ஒழுங்கு? மேலும் ஆசீர்நீர் தெளிப்புபற்றி விவிலியத்தில் சொல்லப்படாததால் திருப்பலியில் இந்நிகழ்வு அவசியமற்றது என விளக்கமளிக்கப்பட்டு சில ஆலயங்களில் இது தவிர்க்கப்பட்டும் வருகிறதே?**

***பதில் :*** இது திருஅவையின் பாரம்பரியங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதொன்றாகும். ஆசீர் நீர் தெளிப்பதில் நாம் சிலவற்றை விளங்கிக்கொள்ள வேண்டும்.

திருஅவையில் இருவகையான நீர் பாவிக்கப்படுகின்றன.

1. திருமுழுக்குத் தண்ணீர்
2. ஆசீர் நீர்

திருப்பலியின் போது பாவிக்கப்படும் தண்ணீர் திருமுழுக்குத் தண்ணீர் ஆகும். எல்லாக் கோவில்களிலும் சிற்றாலயங்களிலும் திருமுழுக்கின் நினைவாகத் தண்ணீரைப் புனிதப்படுத்தித் தெளிக்கும் சடங்கு இடம் பெறலாம். இது ஞாயிறு திருப்பலிகளிலும் சிறப்பாக பாஸ்கா காலத்தில் வரும் ஞாயிறு திருப்பலிகளிலும், சனிக்கிழமை மாலையில் நடைபெறும் ஞாயிறுக்கான திருப்பலிகளிலும் இடம் பெறலாம்.

இச்சடங்கு திருப்பலியில் இடம் பெற்றால், திருப்பலி தொடக்கத்தில் வரும் பாவத்துயர்ச் செயலுக்குப் பதிலாக நிகழ்த்தப்படும். அருள்பணியாளர் மக்களுக்கு வாழ்த்துக் கூறியபின் தமது இருக்கை முன் நின்று மக்களை பார்த்துப் புனிதப்படுத்தப்பட வேண்டிய தண்ணீர் நிறைந்த கலத்தை தம் முன் வைத்துக்கொண்டு செபிப்பார். தண்ணீருடன் உப்புக் கலப்பது இடத்தின் சூழ்நிலைக்கோ மக்களின் வழக்கத்திற்கோ ஏற்றதாக இருப்பின் அருள்பணியாளர் உப்பை புனிதப்படுத்தி அதனுடன் சேர்ப்பார். அதன் பின்பு தண்ணீரை இறைமக்கள் மேல் தெளிப்பார். அப்போது பாவமன்னிப்பை வெளிப்படுத்தும் பொருத்தமான பாடலை மக்கள் பாடுவர்.



தண்ணீர் தெளித்தல் பற்றி விவிலிய ஆதாரங்கள் உண்டு, (உதாரணமாக) திபா 50 - 9 ஆண்டவரே ஈசோப்பினால் என்மேல் தெளித்தருளும் நான் தூய்மையாவேன், என்னைக் கழுவியருளும் நான் உறைபனியிலும் வெண்மையாவேன், என கூறப்பட்டுள்ளது மேலும் எசேக்கியேல் 36: 25- 26, 47:1-2,9 செப் 3:8 தானி3:77 - 79 1பேதுரு 1:3-5 திருப்பலியில் திருமுழுக்கின் நினைவாக பாவத்துயர்ச் செயலுக்குப் பதிலாக மட்டுமே தண்ணீரைப் புனிதப்படுத்தி தெளிக்கும் சடங்கு நடைபெறும் இதுவே முறையான வழிபாடு முறையாகும்.

ஆசீர் நீரானது உயிர்ப்பு திருவிழிப்பு திருப்பலியின் போது புனிதப்படுத்தப்பட்டு இறைவனின் ஆசீரை மக்களுக்கு தெளிக்கும் முகமாகவே பயன்படுத்தப்படுகிறது. இந்நீர் திருப்பலியின் போது பயன்படுத்தப்படுவதில்லை. தெளிக்கும் முகமாகவே பயன்படுத்தப்படுகிறது. இந்நீர் திருப்பலியின் முன்பு ஆசீர் நீர் தெளிக்கப்படுவது புனிதர்களின் நவநாட்கள் நடைபெற்றால் அல்லது புனிதர்களின் ஆசீர் வழங்கப்பட்டால் இடம் பெறும். இவை பக்தி முயற்சிகள் மாத்திரமே ஆகும். இவ்வழக்கத்திற்கும் திருப்பலி வழிபாடு முறைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. மேலும் திருப்பலியின் பின்பு நவநாட்கள் செய்வதில்லை.

திருப்பலியின் இறுதியில் மூவொரு இறைவனின் ஆசீரின் பின்பு எவ்வித ஆசீரும் வழங்கப்படமாட்டாது. எனவே திருப்பலி முடியும் போது ஆசீர் நீர் தெளிக்கப்பட மாட்டாது. ஏனெனில் மூவொரு இறைவனின் ஆசீர் அனைத்திற்கும் மேன்மையானதாகும். திருவிழாக்களில் திருப்பலியின் பின்பு புனிதர்களின் திருச்சுரூப ஊர்வலம் இடம் பெற்றால் ஆசீர் நீர் தெளிக்கப்பட்டு புனிதர்களின் ஆசீர் வழங்கப்படும். இது பக்தி முயற்சிகளே அன்றி திருவழிபாடு அல்ல. இவை இறைமக்களின் நம்பிக்கை வாழ்வை மேம்படுத்துவனவாகும்.

**04. ஞாயிறு தினங்களில் ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட திருப்பலிகள் இடம் பெற்று வருகின்ற ஆலயங்களில் பங்கு அறிவித்தல்கள், திருமண அறிவித்தல்கள் என்பன ஒரு திருப்பலியில் மட்டுமே அறிவிக்கப்படுகிறது இதனால் பெரும்பாலான பங்குமக்களுக்கு உரிய அறிவிப்பு தகவல்களை தெரிந்து கொள்ள வாய்ப்பு இல்லாமல் போகின்றதே?**

***பதில் :*** இது திருப்பலியின் ஓர் அம்சம் அல்ல. பங்கு மக்களின் வசதிக்கேற்ப பங்குத்தந்தை அறிவித்தல் கொடுப்பதைப் பற்றி தீர்மானிக்கலாம். உரோமைத் திருப்பலி நூலின் பொதுப் படிப்பினை எண் 90 இவ்வாறு கூறுகிறது. திருவிருந்து மன்றாட்டுக்குப் பின் தேவைப்படின் சுருக்கமான அறிவிப்புகள் வழங்கலாம். அதாவது அவசியமான தகவல்கள் இருப்பின் அறிவிப்புக்கள் வழங்கப்படும். பங்குத்தந்தை அறிவிப்புக்களை கொடுப்பது சாலச்சிறந்தது. பங்கு அறிவிப்பு பற்றிய நடைமுறை சிக்கல்கள் தோன்றும் பட்சத்தில் பங்குத்தந்தையுடன் ஆலோசிப்பது சாலச்சிறந்தாகும். இவை திருவழிபாடு கோட்பாட்டுக்குள் இடம் பெறாது.

**பதிலளிக்கிறார் : அருட்பணி. இ. யூட் சர்வானந்தன் அடிகளார்**
**இயக்குனர்,**
**திருவழிபாட்டு ஆணையம்**
**திருகோணமலை மறைமாவட்டம்**

**இந்த உலகமே உன்னைத் திரும்பிப் பார்க்க வேண்டுமென்றால் நீ யாரையும் திரும்பிப் பார்க்காதே...!!!! - ஹிட்லர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மறைமாவட்டம்

## எகெட் கரித்தாஸ்

## January - June 2020 அரையாண்டறிக்கை

## AMTY Project

திருகோணமலை கரித்தாஸ் நிறுவனத்தில் பல வருடகாலமாக சமயங்களுக்கு இடையே நல்லுறவை பேணுதல் மற்றும் இளைஞர் யுவதிகள் மத்தியில் வலுவூட்டல் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றது. அந்த வகையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற சில செயற்பாடுகளாவன:



**இளைஞர்களுக்கான வலுவூட்டல் பயிற்சி**

கொழும்பு SEDEC தேசிய நிலையத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாசி மாதம் 20ம் திகதி - 24ம் திகதி வரை பண்டத்தரிப்பு யாழ்ப்பாண தியான இல்லத்தில் இடம்பெற்ற இளைஞர்களுக்கான வலுவூட்டல் பயிற்சி நெறியில் சமூகவலைத்தளத்தின் ஊடாக ஏற்படுகின்ற சாதக, பாதக நிலைமை மற்றும் தொழில்நுட்ப ரீதியான விடயங்களை 72 இளைஞர் யுவதிகளுக்கு பயிற்றுவிப்பதற்காக திருகோணமலை மறைமாவட்ட இணைப்பாளர் சார்பாக திரு.M.A.M. றிஸ்மி அவர்கள் சென்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.





**அனுபவப்பகிர்வும் தைத்திருநாள் கொண்டாட்டமும்**

சமயங்களை ஒருநிலைப்படுத்தும் சமயங்களுக்கு இடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்காக EHED Caritas மற்றும் கரித்தாஸ் இரத்தினபுரி இணைந்து திருகோணமலை மூதூர் பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள அம்மன் நகர் கிராமத்தில் மூன்று நாள் அனுபவப் பகிர்வு நிகழ்வினை கடந்த 2020.01.24 தொடக்கம் 2020.01.26 வரை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து 40 உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர். இவற்றில் அரச உத்தியோகத்தர்கள் இளைஞர், யுவதிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் சமாதான குழுக்களில் இருந்து பங்குதாரர்கள் கலந்து கொண்டிருந்ததுடன் தைத்திருநாளை பல்சமய அங்கத்தவர்கள் இணைந்து கொண்டாடினர்.

### Healing and Reconciliation Project

ஆற்றுப்படுத்தலினூடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் சட்டத்தினூடாக திருகோண-மலை ஆண்டாங்குளம் மற்றும் கன்னியா பிரதேச மக்கள், யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்திருந்த எமது சகோதர உறவு-களுடன் நல்லிணக்க செயற்பாடுகளை மேற்கொண்டனர். இதில் 20 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த உலகமே உன்னை திரும்பி பார்க்க வேண்டுமென்றால் நீ யாரையுமே திரும்பிப் பார்க்காதே - ஹிட்லர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொண்டு செயற்பாடுகள்



எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினூடாக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் பிள்ளைகளுக்குரிய கல்விச் செயற்பாட்டிற்குரிய கற்றல் உபகரணங்கள், பாதணிகள் கொள்வனவு செய்வதற்குரிய வவுச்சர், வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்குரிய உலர்உணவுப் பொதிகள் மற்றும் வலுவிழந்த பெண்ணொருவருக்கு துவிச்சக்கரவண்டியொன்றும் வழங்கி வைக்கப்பட்டன.

### நத்தார் ஒன்றுகூடல் - 2019



பணியாளர்களுக்குரிய 2019ம் ஆண்டின் நத்தார் ஒன்றுகூடலானது 2020.01.06 அன்று காலைத்திருப்பலி எகெட் கரித்தாஸ் நிறுவனத்திலும், ஏனைய நிகழ்வுகள் தீபம் நிலையத்திலும் சிறப்பிக்கப்பட்டன. பணியாளர்கள் தத்தம் நத்தார் இரகசிய நண்பர்/நண்பிகளுக்குரிய பரிசில்களை பரிமாறிக் கொண்டதுடன், விளையாட்டு நிகழ்வினூடாக தமது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தியிருந்தனர்.

### CIMS தொடர்பான கருத்தமர்வு



Caritas International Management Standard (CIMS) தொடர்பான கருத்தமர்வானது 2020.01.08 அன்று எகெட் கரித்தாஸ் ஒன்றுகூடல் மண்டபத்தில் தலைமைச் செயலகத்திலிருந்து வருகை தந்திருந்த திரு.சகாயராஜா மற்றும் திரு. பிரெட்ரி ஆகியோரினால் பணியாளர்களுக்கு நடாத்தப்பட்டிருந்தது. நிறுவனத்தின் நியமங்கள், சுய ஆய்வு, சுய மதிப்பீடு, நிறுவனங்களின் கொள்கைகள் போன்றன இக்கருத்தமர்வில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

Edu





**2020**

**தை தொடக்கம்**

**காலாண்டு**

**செயற்பாடுக**





### Emotional Literacy for school children project

### "General awareness for teachers on programme contents and emotional literacy concepts"

இத்திட்டத்திற்கென தெரிவு செய்யப்பட்ட தி/தி/புனித சூசையப்பர் தேசிய கல்லூரியில் 2020.03.04 அன்றும், தி/விபுலானந்தாக் கல்லூரியில் 2020.03.07 அன்றும் அருட்பணி பிரேம் ஆனந்த் OFM Cap அவர்களினால் இக்கருத்தமர்வானது நடாத்தப்பட்டது. திட்டம் சார் விழிப்புணர்வு, ஆசிரியர்கள் பாடசாலையில் எதிர்நோக்கும் சவால்கள், மாணவர்கள் மட்டில் முகங்கொடுக்கும் இடையூறுகள், மற்றும் அவற்றிலிருந்து விடுபடக்கூடிய உத்திகள் போன்றவை இக்கருத்தமர்வில் பகிரப்பட்டதுடன் ஆலோசனைகளும் பெறப்பட்டன.

### Special Coaching on value education

Education Support for War Affected Children திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்ட மாணவர்கள், பெற்றோர்களுக்குரிய "Special Coaching on value education" கருத்தமர்வானது 2020.06.25 அன்று எகெட் கரித்தாஸ் SSC மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது வளவாளர் அருட்பணி X.I.ரஜீவ அவர்களினால் கல்வி கொள்கைகள், விழுமியங்கள், தனிமனித, சமூக, ஆன்மீக மற்றும் நடத்தைசார் விழுமியங்கள் பற்றிய ஆழமான பல கருத்துக்களைப் பல்வேறு குறும்படங்கள், காணொளிகள் மூலமாக பரிமாறியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.





### Organizing and conducting training for school students





தி/தி/புனித சூசையப்பர் தேசிய கல்லூரியில் தெரிவு செய்யப்பட்ட தரம் 10A,B பிரிவைச் சேர்ந்த நான்கு குழுக்களைக் கொண்ட மாணவர்களது ஆளுமை விருத்தியையும், மனவெழுச்சியையும் அதிகரிக்கும் மாணவர்களின் மனதை ஒருநிலைப்படுத்தி, அனைத்து புலன்களையும் ஒரே விடயத்தில் கண்ணோக்கும் விளையாட்டுக்களுடன் கூடிய இச்செயற்பாடானது 2020.03.12 அன்று கல்லூரியில் அருட்பணி பிரேம் ஆனந்த் OFM Cap அவர்களினால் நடாத்தப்பட்டது.

### மனித வியாபாரம்



திருகோணமலை எகெ
ஆட்கடத்தல் தரவு மற்
ஈடுபட்டு வருகின்றது. கு
ஆகிய பிரதேச செயல
மனிதவியாபாரம் என்
அவர்களை அரச, அரச
தேவையான நட்டஈடு,
ஏற்படுத்தி கொடுக்கின்ற
அத்துடன் கல்வித்தின
மனித உரிமைகள் ஆ
செயலகங்களின் மாவட்
அவர்களது ஆலோசனை

### CI Project

அகில உலக Caritas நிதியுதவியுடன் கரித்தாஸ் SEDEC வழிகாட்டலின் கீழ், Covid- 19 பாதிப்பினால் தங்களது தொழில்களை இழந்த 220 வறிய குடும்பங்களுக்குத் தேவையான உலர்உணவுப் பொதிகளும், 290 பேருக்குரிய சுகாதார மற்றும் தற்பாதுகாப்புப் பொருட்களும் திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினால் வழங்கி வைக்கப்பட்டதுடன் மருத்துவ உதவிகளையும் செயற்படுத்தி வருகின்றனர்.





எதிர்பார்த்த போது கிடைக்காத வெற்றி எத்தனை முன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Education Support for War Affected Children திட்டம்



ர்பான
கூடல்
ருந்த
னால்
த்தின்
ளின்
ர்வில்





### தலைமைச் செயலக மேற்பார்வை

Education Support for War Affected Children திட்டத்தின் தலைமைச்செயலகத்தின் மேற்பார்வையானது 2020.02.05 – 2020.02.07 ஆகிய தினங்களில் நடைபெற்றது. திட்டத்தின் குறிக்கோள்கள், பயனாளிகளின் தெரிவு என்பன குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் 17 மாணவர்களினது பாடசாலைகளும், இல்லங்களும் தரிசிக்கப்பட்டன. மாணவர்களுடைய அடைவு மட்டங்கள் எதிர்பாராதவிதமாகவும், திருப்தியளிக்கக்கூடிய நிலையிலும் இருந்தன.





## COVID – 19 உலர்உணவு மற்றும் சத்துணவுப் பொதிகள் வழங்குதல்





கொழும்பு கரித்தாஸ் SEDEC தலைமைச் செயலகத்தின் வழிகாட்டலில் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினால் Education Support for War Affected Children திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவர்கள் மற்றும் பெற்றோர் 116 பேருக்குரிய உலர்உணவு மற்றும் சத்துணவுப் பொதிகள் 2020.06.09 அன்று வழங்கி வைக்கப்பட்டதுடன் அவர்களுக்குரிய கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டது.

**2020**

**டக்கம் ஆனி**

**ாண்டுச்**

**ற்பாடுகள்**

## மாதாந்த கூட்டம்



மாணவர்களினது ஆளுமை, ஆற்றல், மற்றும் சமூக விழுமியங்கள் என்பன மென்மேலும் முன்னேற்றமடைந்திடவும், எதிர்காலத்தில் நல்லதொரு பிரஜைகளாக திகழ்ந்திடவும் எம்மால் இயன்ற செயற்பாடுகளை இத்திட்டத்தின் கீழ் செய்து வருகின்றோம். அந்த வகையில் 2020.02.19 அன்று நடைபெற்ற மாதாந்த கூட்டத்தின் போது திருகோணமலை விக்னேஸ்வரா கல்லூரியில் விஞ்ஞான பாட ஆசிரியராகச் சேவையாற்றும் திருமதி.ஜெயமலர் டேவிட் றோஸ் மைக்கல் அவர்களினால் பெற்றோர் - மாணவர்கள் பயன் பெறும் வகையிலான பின்வரும் விடயங்கள் முன்வைக்கப்பட்டது. அதாவது, பெற்றோர் - மாணவர்கள் உறவு, அவர்களுக்கிடையிலான புரிந்துணர்வு, அணுகுமுறை, பிரச்சினைகளிலிருந்து விடுபடல், அடுத்தவர் மட்டில் காண்பிக்கப்படும் அனபு, மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு என்பன குறித்து மிகவும் சிறப்பாகவும், நட்புறவுடன் கூடிய உரையாடலூடாகவும் தெரிவித்திருந்தார்.

## வியாபாரம் - புலம்பெயர்வு சம்பந்தமான திட்ட செயற்பாடுகள்





லை எகெட் கரித்தாஸ் நிறுவனமானது, வினைத்திறன் மிக்க
் தரவு மற்றும், தகவல் சேகரிப்பு சம்பந்தமான திட்ட செயற்பாட்டில்
ுகின்றது. குறிப்பாக, கந்தளாய், மூதூர், கிண்ணியா மற்றும் குச்சவெளி
தேச செயலக மட்டங்களில் பல்வேறு சமூகமட்ட பிரச்சினைகளுடன்,
ாரம் என்பனவற்றால் பாதிக்கப்பட்டவர்களை இனங்காணுதல்,
அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்புபடுத்தி அவர்களுக்குத்
நட்டஈடு, தொழில்முயற்சிகள், மற்றும் கிராமமட்ட விளிப்புணர்வுகளை
கொடுக்கின்றது.

ல்வித்திணைக்களம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,
ிமைகள் ஆணைக்குழு, சமூக சேவைகள் திணைக்களம், பிரதேச
ளின் மாவட்ட செயலக அதிகாரிகள், சமய அமைப்புக்கள் என்பனவும்
ஆலோசனைகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்கி வருகின்றன.



## Food Security Project









திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினால் 2020ம் ஆண்டில் வறுமைக்கான காரணங்களைக் கருத்திற் கொள்ளலும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தலும் திட்டத்தின் கீழ் குச்சவெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பெரியகுளம், திருமால்புரம், இக்பால்நகர், தாமரைக்குளம், கோபாலபுரம், நிலாவெளி, வாழையூற்று, இறக்கக்கண்டி, கும்புறுபிட்டி – வடக்கு, கும்புறுபிட்டி – தெற்கு, நாவற்சோலை, இரணைக்கேணி ஆகிய கிராமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 600 வீட்டுத்தோட்ட பயனாளிகளிடமிருந்து தரவுகள் பெறப்பட்டதுடன் (PRA), திட்டம்சார் தெளிவுபடுத்தல்களும் (Project orientation), வீட்டுத்தோட்டப் பயிற்சிகளும் (Training on home gardening) நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து 600 பேருக்குரிய வீட்டுத்தோட்டத்திற்குத் தேவையான பயிர்விதைகளும், மரக்கன்றுகளும், கொடுக்கப்பட்டதுடன், ஒருங்கிணைந்த பண்ணை வளர்ப்பினை ஊக்குவிக்கும் முகமாக 200 பேருக்குரிய கோழிக்குஞ்சுகளும், விசேட விதமாக COVID – 19 பாதிப்பினால் அன்றாட வேலை ஊதியங்களின்றி அல்லலுற்ற கணவனை இழந்த, விசேட தேவையுடைய, மருத்துவ பாதிப்புக்குள்ளாகிய 200 பேருக்குரிய உலர்உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்விற்கு எகெட் கரித்தாஸ் நிறுவன பணிப்பாளர், திட்ட இணைப்பாளர், களப்பணியாளர்கள், கிராமசேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள், விவசாயப் போதனாசிரியர்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் பங்குபற்றியதுடன் அனைத்து நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற உதவி புரிந்தனர்.

**ா முறை கிடைத்தாலும் அது தோல்வியே - ஹிட்லர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் பக்கத் தொடர்ச்சி ... அன்னை மரியாவின் ...


தம் விண்ணேற்றத்தின் வழியாக இயேசு நம்மை விட்டு செல்லவில்லை. மாறாக இன்றும் நம்மோடு உயிர் தரும் ஆற்றலாக, வாழ்விக்கும், வளர்விக்கும், வல்லமையாக செயல்படுகிறார். அது போலவே மரியாவும் விண்ணேற்பின் வழியாக நம்மை விட்டு தூர செல்லவில்லை. நிறைவாழ்வு நோக்கிய நம் பயணத்தில் நம்மோடு இணைந்துள்ளார்.

கிறிஸ்துவே முதலில் உயிர் பெற்றார். அடுத்து கிறிஸ்துவின் வருகையின் போது அவரைச் சார்ந்தோர் உயிர் பெறுவர் (1கொரி.15:23-24), நல்லன செய்தோர், வாழ்வு பெற உயிர்த்தெழுவர் (யோ.5:28-29) இவ் இறைவார்த்தைகளின் பின்னணியில் அன்னை மரியா உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்று புரிந்து கொண்டால் மீண்டும் ஒரு முறையாக எல்லா கிறிஸ்தவர்களுக்கும் இறுதியாக தரப்படபோகின்ற சிறப்பு ஆசீரை அன்னை மரியாவுக்கு முன் கூட்டியே தந்து விட்டார்" என்கிறார். விவிலிய பேராசிரியர் ரேமண்ட் பிரௌன் தமது சிலுவையின் பேறுபலன்களை முன் கூட்டியே மரியாவுக்கு அளித்து,பாவம் இல்லாமல் காத்துக் கொண்டது போல் நமக்கெல்லாம் முன்பாக மரியாவுக்கு இறைவன் இந்த சிறப்பாசீரை அளித்துள்ளார்.

விண்ணேற்பு என்பது யூத மரபில் புதிய செய்தி அல்ல. விவிலியத்தில் இது குறித்து பல்வேறு உதாரணங்களை காணலாம். அன்னை மரியா மட்டுமல்ல, ஏனோக்கு (தொநூ.5:24), எலியா (2அரச.2:11), மோசே (இச.34:5-6) போன்ற இறைமனிதர்களின் வாழ்விலும் இத்தகைய நிகழ்வினை காண்கின்றோம். இவ்வாறு இறைமனிதர்கள், நம்பிக்கையில் வாழ்ந்து இறைவனுக்கு உகந்த வாழ்வு வாழ்ந்தவர்கள் கடவுளால் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட செய்தியை நாம் காண்கின்றோம்.

மரியன்னையின் விண்ணேற்பு, வாழும் திருஅவைக்கு நம்பிக்கையை தருகிறது. எனது கிறிஸ்தவ வாழ்வுக்கு மிகப் பெரிய நம்பிக்கையைத் தருகிறது. "கடவுளின் மகிமையில் எனக்கும் பங்கு உண்டு" என்ற உறுதியைத் தருகிறது. இதனையே இத்திருவிழா திருப்பலியின் தொடக்கவுரை பின்வருமாறு சொல்கிறது "இவ்வுலகில் பயணம் செய்யும் மக்களுக்கு உறுதியான நம்பிக்கையையும் ஆறுதலையும் வழங்கும் முன்னடையாளமாகவும் அது விளங்குகிறது. ஏனெனில் உயிர்களுக்கெல்லாம் ஊற்றாகிய உம் திருமகனுக்குச் சொல்லற்கரிய முறையில் மனித உடல் கொடுத்து அவரைப் பெற்றெடுத்த அப்புனித அன்னையை நீர் கல்லறையில் அழிவுறாமல் காத்தது மிகப் பொருத்தமே."

5ம் நூற்றாண்டிலே மரியா விண்ணேற்படைந்தார் என்ற நம்பிக்கை இருந்துள்ளது என்பதை அறிவோம். இருப்பினும் 1950ல் தான் இதை நம்பிக்கை கோட்பாடாக திருஅவை அறிவித்தது. இது ஏன்? இந்த நூற்றாண்டு இரண்டு உலக மகா யுத்தங்களைச் சந்தித்தது. மில்லியன் கணக்கில் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. இந்நிலை மனித வாழ்வை கேள்விக்குட்படுத்தியது. இப்பின்னணியிலும் உலக ஆயர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மரியாவின் விண்ணேற்பு மக்களுக்கு நம்பிக்கை ஊட்ட நம்பிக்கை கோட்பாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. நாமும் தூய்மை வாழ்வு வாழ்ந்தால் நாமும் விண்ணேற்பு அடைவோம் என்ற நம்பிக்கை தருகிறது.




இன்று உலகம் முழுவதும் கொரோனாவின் தாக்கத்தால் நிலைகுலைந்து போயுள்ளது. கண்ணுக்கு புலப்படாத வைரஸ் மனித இருப்பையே கேள்விக்கு உட்படுத்தியுள்ளது. உலக வல்லரசுகள்-என்று தம்பட்டம் அடித்து ஏனைய உலக நாடுகளை சிறுமைப்படுத்திய நாடுகள் இப்பொழுது கொவிட்-19 இனால் சிறுமைப்படுத்தப்பட்டுள்ளது. உலகப் பொருளாதாரம் முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு பாதாளத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

இறைவன் படைத்த தூய்மையான இவ்வுலகம் மனித சுயநலத்தால் கறைபடிந்துள்ளது. மாசுபடிந்த காற்றை சுவாசிக்காமல் இருக்க முகக்கவசம் அணிந்த காலம் மாறி இப்பொழுது தூய்மையான காற்றை உள்வாங்க முடியாமல் முடங்கிக்கிடக்கின்றோம். இறைவன் தேவையில்லை. என்னால் எல்லாம் முடியும் என்ற மமதையில் வாழ்ந்து கொண்டிருந்த நாம் வாழ்வின் ஊற்றான இறைவனை மறந்தோம்: நம்பிக்கையின் இருப்பிடமாக இருந்த ஆலயங்கள் இழுத்து மூடப்பட்டன. ஆறுதல் தரும் வழிபாடுகள் நிறுத்தப்பட்டன. இறைவன் இருக்கின்றாரா என்ற புலம்பல்? இத்துணை அனர்த்தத்தின் மத்தியிலும் பல நன்மைகளும் இருளின் மத்தியில் ஒளிக்கீற்று போன்று இல்லாமல் இல்லை. குடும்பமாக வாழத் தொடங்கினோம்: ஒன்றாக உணவருந்தினோம்: இறைவனைத் தேடினோம்: சிக்கனமாக வாழக் கற்றுக் கொண்டோம்: குடும்பத்திலும் அயலிலும் உறவை வளர்த்தோம்: பிறர் தேவை உணர்ந்தோம்: பகிர்ந்து வாழ முயன்றோம்: இயற்கையில் அக்கறை கொண்டு பராமரித்தோம்;இன்னும் பல. மீண்டும் இயல்பு வாழ்வு ஆரம்பமாகிவிட்டது. புதிய வழமைக்கு உள்வாங்கப்பட்ட நாம் மீண்டும் பழைய வழமைக்கு திரும்பாமல் நம்பிக்கையோடு அன்னை மரியாவைப் போன்று தூய்மையான அன்பு கொண்டு ஒருவர் ஒருவரோடு கைகோர்த்து பயணிப்போம். ஒருவர் ஒருவரில் அக்கறை கொண்டு வாழ்வோம். இறைவனின் படைப்பை பாதுகாப்போம். இறைவனில் சரணடைவோம். அன்னையின் வாழ்வு நம் வாழ்வாகட்டும்.

# படித்ததில் பிடித்தது

அருட்பணி. T. கிங்ஸ்லி றொபட்

## கட்டுப்பாடு



வால் பட்டமும் கிரீடப் பட்டமும் வானில்
பறக்க ஆரம்பித்தன.

கீழே இரு சிறுவர்கள் ஒய்யாரமாக
அவற்றின் நூல் நுனியை இயக்கிக்
கொண்டிருந்தனர்.

இரு பட்டங்களையும் காற்று நண்பன்
உசுப்பேற்றி விட....
உயரப் பறக்கப் பார்த்தன.

கடுப்பானது வால் பட்டம்:
இந்தக் காற்று நண்பன் மேலே கூட்டிச் சென்று என்னை முன்னேற்ற முயற்சி செய்கிறான்.
ஆனால் இந்த நூல் நண்பனோ...
என்னைப் பூமியை நோக்கிக் கீழே இழுத்துக் கொண்டிருக்கிறானே...!

முடிவுக்கு வந்தது:
இந்த நூல் நண்பனின் உறவு எனக்கு வேண்டாம்...
அறுத்துக் கொள்ளப் போகிறேன்.

எச்சரித்தது கிரீடப் பட்டம்:
ஐயோ அப்படியெல்லாம் செய்து விடாதே...!
நீ இப்படி உயரப் பறக்கக் காரணமே அந்த நூல் நண்பன்தான். உன்னைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும் அவன்தான். அதுவே அவனது பணி. அவனது உறவும் நட்பும் நமக்கு மிக மிக அவசியம். மறந்துவிடாதே...

கேட்டதா வால்பட்டம்..?
சொல்லச் சொல்ல நூல் நண்பனின் உறவைத் துண்டித்துக் கொண்டது.

உயர உயரப் பறக்க ஆரம்பித்தது:
ஆஹா... என்னே கட்டுப்பாடற்ற வாழ்க்கை.
இனி வானம் தொட்டுவிடும் தூரம்தான்.

கொஞ்ச நேரத்தில் காற்று வேகமாய் வீசியது.
தாக்குப் பிடிக்காத சுதந்திரப் பட்டம் தாறுமாறாய்ப் பறக்க ஆரம்பித்தது.

அந்த வால்பட்டத்தின் வால் காணாமல் போனது.
கொஞ்ச நேரத்தில் தன் உறுப்புகள் ஒவ்வொன்றையும்
தவணை முறையில் இழந்தது.

இறுதியில்...
முள் மரத்தில் மாட்டிக் கொண்டு பரிதாபமாய் செயல் இழந்து போனது.

செயலிழந்து கிடந்த வால்பட்டத்தைப் பார்த்து
கட்டுப்பாட்டோடு பறந்த கிரீடப் பட்டம் சொன்னது:
நூலற்ற காற்றாடி நொந்து நூலாகும்.

**கட்டுப்படுத்தும் நண்பரே கரை சேர்ப்பார்**

## நல்வாழ்வு காணவே



பிறரன்புப் பணிகளை
பெரிதென நாமெண்ணி
துணைபுரிய முன்வரும் போது
நிச்சயம் நம்வாழ்வு
பெருமைகளைக் கண்டே தீரும்
தீமைகள் வேண்டாம் வாழ்வில்
தீவினையும் வேண்டாமே
அன்பும் அறநெறிகள்
நம்மோடு இணைத்துக் கொள்ள
உண்மையில் நம்வாழ்வு
பெருமைகளைக் கண்டே தீரும்
நன்மைகளை நாடிச் செல்வோம்
நலன்களைக் காண்போம் வாழ்வினிலே...

A. வின்சன்
சகாயபுரம்
மூதூர்

என்னை யார் தோற்கடித்தது என்று கோபத்துடன் பார்த்தேன், வேறு யாரும் இல்லை. என் கோபம் தான் என்னைத் தோற்கடித்தது. - ஹிட்லர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் தனித்தன்மையை ஏற்றுக்கொள்ளுங்கள்

அருட்பணி.பொன்சியன். அமதி



முகம் பார்க்கும் கண்ணாடி பாவனைக்கு வராத காலம் அது. விவசாயி ஒருவர் தனது வயலில் உழுது கொண்டு இருக்கின்றார். வயலுக்குள் புதைந்து கிடந்த பொருளொன்றை கண்டெடுக்கின்றார். அது விசித்திரமான பொருளாக இருந்ததால் அதை வீட்டுக்கு எடுத்துச் செல்கின்றார். பின்பு அதை நன்றாகக் கழுவி துணியினால் துடைக்கின்றார். என்ன ஆச்சரியம் இளமைக்காலத்து கம்பீரமான தனது தந்தையை அதிலே பார்க்கின்றான்.

பங்குத்தந்தையிடம் ஓடுகின்றான் 'பாதர் எனது அப்பாவின் உருவத்தைப் பாருங்கள் எவ்வளவு அழகாக இருக்கிறார்", என்று ஆச்சரியத்தோடு கூறுகின்றான். பங்குத்தந்தை பார்த்துவிட்டு, "இது உனது அப்பாவல்ல எனக்கு முன்னர் இந்தப் பங்கிலிருந்த பங்குத்தந்தை இவர், ஆகா! உண்மையாகவே இவர் ஒரு புனிதர்" என்கின்றார். விவசாயி மீண்டும் கண்ணாடியை வாங்கிப் பார்க்கின்றார். "முன்னால் பங்குத்தந்தை எனது அப்பாவைப் போலவே இருக்கின்றார்" என்று சொன்னான். அவ்வேளையிலே விவசாயியின் மனைவி அங்கே வருகின்றாள். கண்ணாடியை வாங்கிப் பார்க்கின்றாள். அவளது முகம் இறுக்கமானது, கோபத்தோடு, தனது கணவனைப் பார்த்து "யார் இந்தப் பேய் மூஞ்சு? இவளோடு உனக்கென்ன வேலை?" என சத்தமிட்டாள்.

இந்த மூவரும் வெவ்வேறு மனநிலையோடு தங்களைத் தாங்களே கணிப்பிட்டுக்கொள்கின்றனர். ஒருவர் அழகான வாலிபனாகவும் மற்றவர் புனிதராகவும் பெண் தன்னை அசிங்கமான படைப்பாகவும் பார்க்கின்றனர். எமது உள்ளத்தின் ஆழத்தில் எம்மைப்பற்றி நாம் என்ன எண்ணுகிறோமோ அதுவாகவே நாம் மாறிவிடுகின்றோம். எம்மைப் பற்றி சுயமதிப்பீடு தாழ்வாக இருக்கும் போது தான் கோபம், வெறுப்பு, பகை, பொறாமை மற்றும் மன அழுத்தம் போன்றவைகள் எம்மை தொற்றிக்கொள்கின்றன. என்னை நான் எப்படிப் பார்க்கின்றேன்? அழகானவனாக, அசிங்கமானவனாக, பயனுள்ளவனாக, பயனற்றவனாக, வலிமையுடையவனாக, பலவீனனாக. அழகான வலிமையான மற்றும் என்னைவிடத் திறமையுள்ளவர்களால் நான் தொடர்ச்சியாகப் பயமுறுத்தப்படுகின்றேனா? எமது பலத்தோடும் பலவீனத்தோடும், எமது உடல் உள ஆன்மீகக் கட்டமைப்புக்களை ஏற்றுக் கொள்ளும்போது வாழ்வை சந்தோஷத்தோடும் திருப்தியோடும் கொண்டாடுகின்றோம்.



இருவர் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். ஒருவர் அனுபவசாலி மற்றவர் அனுபவம் குறைந்தவர். அனுபவசாலி பிடிபடும் எல்லா மீன்களையும் சேகரித்தார். மற்றையவர் பெரிய மீன் பிடிபட்டபோதெல்லாம் அவற்றை மீண்டும் கடலுக்குள் போட்டுவிட்டார். நீண்ட நேரமாக இதை அவதானித்துக் கொண்டிருந்த அனுபவசாலி பொறுமையிழந்து, "ஏன் பெரிய மீனை கடலுக்குள் வீசுகின்றீர்?" எனக்கேட்டார். அதற்கு மற்றவர் மீன் சமைக்க என்னிடமுள்ள பாத்திரம் சிறியது என்றார்.

இதேபோல் தான் கடவுள் எமக்குத் தரும் பெரிய திட்டங்களையும், பெரிய கனவுகளையும், அரிய சந்தர்ப்பங்களையும் நாம் விட்டு விடுகின்றோம்.

எம்மை சிறிய பாத்திரங்களாகக் கணிப்பிட்டு விடுகின்றோம். கடவுள் மேல் உள்ள எமது நம்பிக்கைக் குறைபாடே இதற்கு காரணமெனலாம். கடவுள் எம்மைப் பெரிதாகக் கணிப்பிட்டிருக்கையில் நாம் எம்மையே குறைத்து மதிப்பிடுகிறோம். அதனால் எமது வாழ்க்கை குறுகிய வட்டத்துக்குள் சுருங்கி விடுகிறது. புதைக்கப்பட்ட தாலந்துகளாக இருக்க விரும்புகின்றோம்.

மரியாவின் பாடலில் (லூக் 1:48-49) "ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர். ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார்" எனக் கூறுகின்றார். புனித மரியா தனது தாழ்மையில் கடவுள் தன்னை மீட்புத் திட்டத்திற்காகப் படைத்திருக்கிறார் என்பதையும் அதற்காக மாபெரும் செயல்களைப் புரிந்துள்ளார் என்பதையும் ஏற்றுக் கொண்டார். கடவுள் எம் எல்லோரையும் தமது சாயலாகவும் தமது திட்டத்தை நிறைவேற்றவுமே படைத்திருக்கின்றார். ஆகவே வாழ்வின் மகிழ்ச்சிக்காக திறவுகோல் எம்மை நாமே எமது உடல் உள நிலைப்பாட்டையும், உணர்வுகள், ஆற்றல்கள், திறமைகள் என்பவற்றை ஏற்றுக்கொள்வதுமே ஆகும்.




சுய ஏற்புடைமை என்பது ஒருவர் தன்மட்டில் தோழமையோடு இருப்பதும் இக்கணத்தில் நான் யார் என்பதில் மகிழ்ச்சியாக இருப்பதுமாகும். "உன்னை அன்பு செய்வதுபோல் உன் அடுத்திருப்பவரையும் அன்பு செய்வாயாக" (யாக் 2: 35-37, லூக் 10:25-27) சுய விழிப்புணர்வு என்பது பலத்தோடும், பலவீனத்தோடும் எம்மை நாமே ஏற்றுக் கொள்வதோடும், நமது தன்மையின் முழுமையையும் குறைபாட்டையும் உள்வாங்கி நான் யார் என்பதை உறுதிப்படுத்தக் கற்றுக் கொள்வதும் சுய விழிப்புணர்வுமாகும். சுய ஏற்புடைமை என்பது எம்மட்டில் நாமே தீர்ப்பிடாமல் இருப்பதாகும்.

நம்மை நாமே அன்பு செய்ய முடியாவிட்டால் எப்படி மற்றவர்களை அன்பு செய்ய முடியும்? மும்மடி அன்புக் கட்டளை என்பது ***கடவுள் அன்பு, சுய அன்பு, பிறர் அன்பு.***

தன்னை அன்பு செய்பவர் தனது தனித்தன்மையை ஏற்று அதைக் கொண்டாடுவார். இறைவன் மனிதர்களை ஒரே அச்சில் வார்த்து எடுக்கவில்லை. இருமனிதரின் கைவிரல் அடையாளம் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஒவ்வொருவரையும் இறைவன் தனித்துவமுடையவராகவே படைத்துள்ளார். இறைவன் எமக்குத்தந்த தனித்துவத்தை உணர்ந்து ஏற்றுக் கொண்டு எம் வாழ்வைக் கொண்டாடுவோம்.

கள்ளிப்பூ ரோசாப்பூவைப் பார்த்து பொறாமைப்படத் தேவையில்லை. இரண்டும் ஏதோவகையில் அழகுதான். ரோசாமலர் அதிகமாக மனிதர்களால் விரும்பப்படுகின்றது. அவ்வளவு தான். எமது தனித்துவத்தை நாம் மதித்தால் எம்மைவிட அழகானவர்களை அறிவானவர்களை பிரபல்யமானவர்களை நாம் பார்த்து பயப்படத்தேவையில்லை. எம்மிலே நாம் நிறைவு காணும்போது, எமது முழு ஆற்றலையும் நாம் வெளிக்கொணர முடியும். மற்றவர்களை விட எம்மைத் தாழ்வாக நாம் கருதுவது எம்மட்டில் நாம் கொண்டிருக்கும் பொய்யான நம்பிக்கையாகும். சிறுவர்கள் தம்மை வித்தியாசமாகக் காட்டிக் கொள்ள முயல்வதில்லை. ஏனெனில் அவர்கள் அவர்களாகவே இருக்க முயற்சிப்பார்கள். மற்றவர்களோடு போட்டியிட்டு வளர தூண்டப்படும்போதே தமது சுயத்தை அவர்கள் இழக்கின்றனர்.

நாம் இறைவனின் உன்னத படைப்பு என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். பலர் தம்மை வித்தியாசமானவர்களாக காட்டிக் கொள்ள நேரத்தையும் பணத்தையம் செலவிடுகின்றனர். சமூக ஊடகங்கள் வெளித்தோற்றத்திலேயே கவனம் செலுத்துகின்றன. ஆகவே நாமும் எம்மை எப்படி வெளியே காட்டிக்கொள்கின்றோம் அதிலேயே அதிக கவனம் செலுத்துகின்றோம். அதனால் பிரபல்யமான விடயங்களை பின்பற்ற முயற்சிக்கின்றோம். பிரபல்யமானவர்கள் செய்வதையெல்லாம் நாமும் செய்ய முயற்சிக்கின்றோம். நிலாவைப் பார்த்து ஏங்கியிருக்கும் நாம் எம்மைச் சுற்றி உள்ள அழகோடும், சந்தோசங்களோடும் உலாப்போவதை தவறவிடுகிறோம். சரியான தெரிவை நாமே மேற்கொள்ளவேண்டும். எம்மை நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்ள முயலுவோம். இது மாற்றத்திற்கு வழிவகுக்கும் எமது குறைபாடுகளை ஏற்றுக்கொள்வதே அவற்றைக் குறைக்கவழிவிடும். இறைவன் எம்மை தேவதூதர்களாக படைக்கவில்லை மாறாக மனிதர்களாகவே படைத்துள்ளார். இவ்விழிப்புணர்வு எம்மை நிறை மகிழ்ச்சி நோக்கி வழிநடத்தும்.

# ஓர் புதிய தெரிவு! வாழ்த்துக்கள் தந்தையே!

## ஆரோக்கியமான சூழலை நோக்கி நகரும் இலங்கைக் கத்தோலிக்கத் திருஅவை

அண்மையில் இலங்கை அமலமரித் தியாகிகள் சபையின் யாழ்ப்பாண மாகாண முதல்வராகக் கிழக்கு மண்ணின் மைந்தன் அருட்பணி. பெனடிக்ற் இயூஜின் அமதி அவர்கள் சபையால் தெரியப்பட்டு உரோமையில் அமைந்துள்ள சபையின் தலைமைப்பீடத்தில் அங்கீரிக்கப்பட்டுள்ளார். இவரின் பெற்றோர்கள் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களை தங்கள் பூர்வீகமாகக் கொண்டவர்கள் என்பது இங்கு கூடுதலாகக் கவனிக்கப்பட வேண்டியதொன்று ஆகும். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை கிழக்குத் திருஅவையின் அனைத்து தலைமைப் பொறுப்புகளுக்கும் வடக்கிலிருந்தே குருக்களும், துறவிகளும் தெரியப்பட்டு வந்த நிலையில், தற்போது கிழக்கிலிருந்து வடக்கிற்குத் தலைமையேற்க ஒருவரைத் திருஅவை தெரிந்திருப்பது இலங்கைக் கத்தோலிக்க திருஅவையின் வரலாற்றில் ஓர் ஆரோக்கியமான மாற்றம் ஏற்படுவதை நமக்குச் சுட்டி நிற்கிறது.

'வெள்ளைக்காரச்' சுவாமிமாருக்குப் பின் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் விமர்சிக்கப்பட்டுவந்த வடக்குக், கிழக்குத் திருஅவையின் தலைமைத் தெரிவுகளில் காணப்பட்ட **பிரதேச, சாதிய, ஊர்வாரிய, அந்தஸ்து சார்ந்த** ஆதிக்கங்களை மாற்றி அமைக்கும் முக்கிய நிகழ்வாக இத்தெரிவினை நாம் நோக்க வேண்டியுள்ளது.



இலங்கையின் வடக்கில் யாழ்ப்பாண மாகாணத்தின் அமலமரித்தியாகிகள் சபை ஆரம்பித்து வைத்துள்ள இப்புதிய மாற்றத்திற்கான அழைப்பு அனைத்து துறவறசபைகள், மறைமாவட்டங்களிலும் பரந்து இலங்கைக் கத்தோலிக்க திருஅவைக்கு ஓர் ஆரோக்கியமான, புத்துயிருட்டும் புது இரத்தத்தைப் பாய்ச்சி புதிய மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும் என்பதே அனைத்து நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு ஆகும்.

அடிமைத்தனத்தைக் களைந்து, விடுதலையின் மக்களாக இஸ்ராயேல் மக்கள் சீனாய் மலையில் கொண்டாடிய பலியைப் போல, பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலை தந்து, அனைவரையும் ஒரே பிள்ளைகளாக்கிய இயேசுவின் கல்வாரிப்பலி போன்று, இலங்கைக் கத்தோலிக்கத் திருஅவையாகக் கொண்டாடும் ஒவ்வொரு பலியும் ஓர் உயிர்ப்பின், விடுதலையின், மகிழ்வின் பலியாக இருக்க வாழ்த்திச் செபிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**பிறக்கும் போது உன்னோடு இல்லாத பெயர் நீ இறக்கும் பொழுது உன்னோடு தான் இருக்கும்: அதை உன் சாவிற்கு கொடுத்து விடாதே சரித்திரத்திற்கு கொடு. - ஹிட்லர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏதேன் தோட்ட மனிதர்கள்




## திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் அவர்களின் உடலின் இறையியல் பற்றிய சிந்தனைகள்

**அறிமுகம்**

வரலாற்றில் எப்போதும் இல்லாதவாறு தற்காலத்தில் மனித உறவுகள், திருமணவாழ்வு, பாலுறவு, ஆகியன மதிப்பிழந்து வருகின்றன. இன்றைய மனிதன் "இது என் உடல் ஆகவே எனது உடலை கொண்டு எனக்கு எதையும் செய்யும் உரிமையுண்டு" என்கிறான். நாளாந்தம் அறிமுகப்படுத்தப்படும் பல விதமான புதுப்பாணிகளுக்கமைய ஆடைகள் அணிதல், ஏராளமான ஒப்பனைகள், சிவப்பு நிறமடைய மருந்துகள், உடல் உறுப்புக்களை சீர்செய்யும் சத்திரசிகிச்சைகள், உறுப்பு மாற்று சத்திரசிகிச்சைகள் ஆகியவற்றுக்கு ஏராளமான பணத்தை விரயமாக்குகின்றான். அது மட்டுமா? கருக்கலைப்பு, ஆபாச திரைப்படங்கள் தயாரித்தல், உடல் உறுப்பு விற்பனை, ஆட்கடத்தல், விபசாரம், போதை பொருள் பாவனை ஆகிய உடலுக்கெதிரான தீமைகளையும் நாம் இவ்வுலகில் காண்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகளால் அமைதி சீர்குழைந்த குடும்பங்கள், தனிமையாக்கப்பட்ட மனிதர்கள், கைவிடப்பட்ட முதியவர்கள், ஆதரவற்றோராய் இருக்கும் குழந்தைகள் ஆகியோரையும் காண்கின்றோம். இப்படிப்பட்ட சமகால பின்னணியில் அன்பு, திருமணம், பாலுறவு போன்றவற்றின் நோக்கம் என்ன? என்பது பற்றி இறைவனின் திட்டத்தை அறிந்து கொள்ள திருத்தந்தை எம்மை ஏதேன் தோட்டத்திற்கு அழைக்கின்றார். இறைவன் ஏன் மனிதரை ஆண், பெண் என இருபாலாராக படைத்தார்? மனிதன் எப்படி வாழ்கின்றான்? எங்கே சென்றுகொண்டிருக்கின்றான்? என்கிற மனிதனின் ஆழமான கேள்விகளுக்கு விடை தேட திருத்தந்தை படைப்பின் ஆரம்பத்தில் மனித வாழ்வு எப்படி இருந்தது என்று அறிந்து கொள்ள அழைக்கின்றார். திருத்தந்தை 2ம் ஜோன் போல் 1978ம் ஆண்டு திருத்தந்தையாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

திருத்தந்தை 2ம் ஜோன் போல் அவர்கள் மானுடவியலில் நாட்டம் கொண்டவராக மனித மாண்பினை எடுத்தியம்பும் சிந்தனைகளுக்கு பிரசித்தி பெற்றவர். Acting Person, Love and Responsibility ஆகிய மிக பிரபல்யமான நூல்களை எழுதினார். அந்நூல்களில் கடவுள் மனிதனை மாண்போடு படைத்திருக்கின்றார். அவன் ஒரு சடப்பொருளாக நோக்கப்பட முடியாதவன் என்று கூறுகின்றார். திருத்தந்தையர்கள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் பேதுரு சதுர்க்கத்தில் ஒன்றுகூடுகின்ற இறைமக்களுக்கு மறைக்கல்வி உரைகள் வழங்குவது வழக்கம்.

அது General Audience அல்லது புதன்கிழமை மறைகல்வியுரைகள் என அழைக்கப்படுகின்றன. 1979ம் ஆண்டு முதல் 1984ஆம் ஆண்டு வரை திருத்தந்தை 2ம் ஜோன் போல் அவர்கள் அளித்த புதன்கிழமை மறைக்கல்வி உரைகள் நாம் யார்? நாம் ஏன் படைக்கப்பட்டுள்ளோம்?, எதை நோக்கி எம் வாழ்வு நகர்கின்றது?, எம் வாழ்வின் அர்த்தம் எனன? என்கிற ஆழமான மனித கேள்விகளுக்கு விடை தருகின்றார். ஆகவே, அவருடைய இந்த மறைக்கல்வி உரைகளின் தொகுப்பு ஐந்து வருடங்களாக அவர் ஆற்றிய புதன்கிழமை மறைக்கல்வி உரைகளின் தொகுப்பு "உடலின் இறையியல்" என்று அழைக்கப்படுகின்றது. இதனை மிக எளிதான தமிழில் உங்கள் முன் வைக்க ஆசைப்படுகின்றேன். இவை கத்தோலிக்க திருஅவையின் பாலியல் சம்பந்தமான படிப்பினைகளில் ஏற்பட்ட மிகபெரிய திருப்பமாகும். உடல் தீமையானது, பாலுறவு அசுத்தமானது, பாலுறவு பற்றிய கலந்துரையாடல்கள் இச்சைக்குரியவை என்று ஒதுக்கிவைக்கப்பட்ட காலம் இருந்தது. திருத்தந்தையின் உடலின் இறையியல் பற்றிய சிந்தனைகள் மனித பாலியல் வாழ்க்கை பற்றிய நேர்மறையான கருத்துகளை தாங்கி வருகிறது.



**முன்னுரை**

திருத்தந்தை 2ம் ஜோன் போல் அவர்கள், உடலின் இறையியல் என்கின்ற தன்னுடைய மறைக்கல்வி உரைகளை மத்தேயு நற்செய்தி 19ம் அதிகாரத்தில், பரிசேயர்கள் விவாகரத்து பற்றி இயேசுவிடம் கேட்ட கேள்விக்கு இயேசு கூறிய மறுமொழியில் இருந்து ஆரம்பிக்கின்றார். அப்பகுதியை பார்ப்போம்.

***பரிசேயர் அவரை அணுகி, அவரைச் சோதிக்கும் நோக்குடன், "ஒருவர் தம் மனவியை எக்காரணத்தையாவது முன்னிட்டு விலக்கிவிடுவது முறையா? என்று கேட்டனர். அவர் மறுமொழியாக, "படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள், ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்" என்று நீங்கள் மறைநூலில் வாசித்ததில்லையா?" என்று கேட்டார். மேலும் அவர், இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர். இனி அவர்கள் இருவர் அல்ல ஒரே உடல். அப்படியானால் மணவிலக்குச் சான்றிதழைக் கொடுத்து மனைவியை விலக்கி விடலாம் என்று மோசே கட்டளையிட்டது ஏன்?" என்றார்கள். அதற்கு அவர், உங்கள் கடின உள்ளத்தின் பொருட்டே உங்கள் மனைவியரை விலக்கிவிடலாம் என்று மோசே உங்களுக்கு அனுமதி அளித்தார். ஆனால் தொடக்கமுதல் அவ்வாறு இல்லை. பரத்தைமையில் ஈடுபட்டதற்காக அன்றி வேறு எக்காரணத்தையாவது முன்னிட்டுத் தன் மனைவியை விலக்கிவிட்டு வேறொரு பெண்ணை மணப்பவன் எவனும் விபசாரம் செய்கிறான் என உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார்.***

இங்கே, பரிசேயர் இயேசுவிடம் வந்து ஒருவன் எக்காரணத்தை தனது மனைவியை விலக்கிவிடுவது சரியா? என்ற கேள்வியை எழுப்புகின்றனர். அதற்கு இயேசு மறுமொழியாக படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் ஆணும் பெண்ணுமாக படைத்தார் என்று நீங்கள் வாசித்ததில்லையா? என்று கேட்கிறார். (விவாகரத்திற்கான விடையை ஆண்டவர் இயேசு கூறும் போது "தொடக்கத்திலேயே" என்கின்ற பதத்தை இரண்டு தடவைகளில் மேற்கோள் காட்டுகின்றதை நாம் காண்கின்றோம். ஆகவே, "தொடக்கத்திலே" என்கின்ற பதம் திருமணம் பற்றிய இறைவனின் முதல் திட்டத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. திருமணம், அன்புறவு, பாலுறவு ஆகியவற்றுக்கு இறைவனின் திட்டமும் விருப்பமும் இருப்பதை தெளிவுப்படுத்துகிறது. அவர்கள் மோசேயை மேற்கோள் காட்டி விவாகரத்திற்கு முறிவுச்சான்றிதழ் கொடுக்கலாம் என்று கூறிய போது இயேசு அது உங்களின் உள்ளத்தின் பொருட்டே மோசே அனுமதித்தார் ஆனால் தொடக்கம் முதல் அவ்வாறு இல்லை என்று கூறினார். அதே போல் மத்தேயு நற்செய்தி 22ம் அதிகாரம் 23ம் வசனங்களில் சதுசேயர் இயேசுவிடம் வாழ்வின் முடிவு பற்றி கேள்வி எழுப்புகின்றனர். ஏழு கணவர்மாரை திருமணம் செய்துக்கொண்ட பெண் உயிர்த்தெழுதலின் போது யாருக்கு மனைவியாக இருப்பாள்? என்ற கேள்வியை எழுப்பிய சதுசேயருக்கு மறுமொழியாக உயிர்த்தெழுதல் பற்றியும், முடிவில்லா வாழ்வு பற்றியும் இயேசு விளக்கமளிக்கின்றார்.

இந்த விவிலிய வார்த்தைகளை அச்சாணியாக கொண்டு தனது மறையுரைகளை திருத்தந்தை 2ம் ஜோன் போல் அவர்கள் எடுத்துச் செல்கின்றார்கள். நாம் அன்பினால் படைக்கப்பட்டுள்ளோம், அன்புக்காக வாழ்கின்றோம், அன்பின் வடிவான இறைவனை நோக்கி சென்று கொண்டிருக்கின்றோம் என்பதையும் திருத்தந்தை ஜோன் போல் அவர்கள் தனது உடலின் இறையியல் சிந்தனைகள் ஊடாக விளக்கமளிக்க முற்படுகின்றார். ஆகவே, உடலின் இறையியல் என்கின்ற மறைக்கல்வி உரைகள் மனித வாழ்வின் ஆரம்பம் மற்றும் அதன் முடிவு பற்றி ஆராயப்படுகின்ற ஒரு படைப்பாகும்.

இந்த உடலின் இறையியல் பற்றிய மறையுரைகள் திருவிவிலியத்தை அடிப்படையாக கொண்டதாக அமைகின்றது. இயேசு கிறிஸ்து விவாகரத்துக்கான பதிலை பரிசேயருக்கு கூறிய சூழ்நிலையானது அன்றைய உரோமை பேரரசில் திருமணம் என்பது ஒரு பொருட்டாக கருதப்படாத ஒரு விடயாகும்.

திருமணம் புரியாமல் தனிமையில் வாழ்ந்து எவ்வித அர்ப்பணிப்பும் இன்றி இன்பத்தில் திளைத்திருக்கவே உரோமையர்கள் விரும்பினார்கள். அத்தோடு கருக்கலைப்பு, குழந்தைகள் கொலை, ஓரினச் சேர்க்கை என்பன பரவலாக காணப்பட்ட காலக்கட்டமாகும்.

தொடரும் ...

Fr. J. கிறிஸ்டி போல்
இயக்குனர் தந்தை
பொதுநிலையினர் - குடும்ப அப்போஸ்தலிக்கபணியகம்
கண்டி

நாம் எல்லோரும் நிலவைப் போன்றவர்கள், அதற்கு இருளான ஒரு பக்கமும் உண்டு. - ஹிட்லர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுமா தயக்கம்!

## தகவமைப்போம்! தகவமைவோம்!!

இறைஇயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே! உங்களை திருமலை தீபம் இதழ் வாயிலாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். கொரோனா நோய்த்தொற்று காரணமாக பல்வேறு துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் இக்காலத்தில் மீண்டும் வழக்கமான வாழ்க்கை முறைக்குள் நுழையும் நாளை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றோம். எங்கும் இந்தக் கொரோனாவைப் பற்றியே பேச்சு... கொரோனாவிலிருந்து எப்படி தப்பிப்பது, வந்தால் எப்படி பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்ற எண்ணங்களே நம் மனங்களை நிறைத்து ஒருவிதமான பயத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த நேரத்தில் சில உபயோகமுள்ள சிந்தனைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விழைகின்றேன். இந்த உலகின் தலைசிறந்த தொழில் நுட்பங்கள் எல்லாம் கைகளை விரித்துவிட்டன. இந்த கொடிய வைரசுக்கு மருந்து இல்லை, மருத்துவத் துறையால் இதற்கு மருந்து கொடுக்க இயலாது, நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ளவர்கள் பிழைத்துக் கொள்வார்கள், மற்றவர்கள் நோய்த் தாக்கத்தால் பாதிக்கப்படுவார்கள் என்று மருத்துவர்கள் சொல்லிவிட்டனர். இந்த சூழ்நிலையில் கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஒரு சிறப்பான பொறுப்பு ஒன்று உள்ளது. அதுவே, 'உங்களுக்கு சமாதானம்!' என்ற எண்ணத்தைப் பரப்புவது.

சென்ற இதழில், நம் வாழ்வின் எதார்த்தங்களை ஏற்றுக்கொண்டு அவற்றை எதிர்கொள்வதே மகிழ்ச்சியான வாழ்வின் முறை என்பதைப் பார்த்தோம். அந்த வகையில், இந்த இக்கட்டான காலச் சூழ்நிலையை நாம் எப்படி ஏற்றுக் கொண்டு எதிர்கொள்வது என்பதை சிந்திக்க வேண்டும்.

> **தகவமைப்பு என்பது, ஒரு குறிப்பிட்ட ஒவ்வாத சூழ்நிலையில் வாழ்வதற்குத் தேவையான தன்நிலை மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு அந்த ஒவ்வாத சூழ்நிலையை சாதகமான சூழ்நிலையாக்கிக் கொள்வதாகும்.**

**அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா கச**

இந்த உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் உள்ள பொதுவான குணம், 'தகவமைப்பு'. தகவமைப்பு என்பது, ஒரு குறிப்பிட்ட ஒவ்வாத சூழ்நிலையில் வாழ்வதற்குத் தேவையான தன்நிலை மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு அந்த ஒவ்வாத சூழ்நிலையை சாதகமான சூழ்நிலையாக்கிக் கொள்வதாகும். எனவே இந்த கொரோன சூழ்நிலையையும் நாம் நமக்கு சாதகமான சூழ்நிலையாக்கிக் கொள்வதற்கு முயல வேண்டும். இதற்கு மனதளவில் நாம் தயாராக இருக்க வேண்டியது முக்கியமானதாகும். நமக்குள் இந்த சூழ்நிலையில் என்னால் வாழ முடியும் என்ற உறுதியான நம்பிக்கையை உருவாக்க வேண்டும். அந்த நம்பிக்கையில், இந்த சூழ்நிலைக்கான செயல்பாடுகளை நம் உள்ளத்திலும் உடலிலும் நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதுவே இன்று தேவையான தகவமைப்பாகும்.

தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றவேண்டும் என்று நம் முன்னோர் கூறியிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அதற்கு பொருள் இதுதான். மனிதன் தனது சூழ்நிலைக்கேற்ப தன்னை தகவமைத்துக் கொள்கின்றான். எனவே சாதகமற்ற சூழ்நிலை என்று நாம் நினைக்கின்ற சூழ்நிலையையும் நம் முயற்சியால் சாதகமான சூழ்நிலையாக நம்மால் மாற்ற முடியும் என்பதை இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு வேடிக்கையாக ஒரு கதையைக் கூறுவார்கள்.

ஒரு மனிதனை காவலர்கள் திருடன் என்று கூறி கைது செய்து சென்றுவிட்டார்கள். அவன் மிகப் பெரிய திருடன் என்று அவன் மீது குற்றம் சுமத்தப்பட்டது. அவனது தொடர்புகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. அவன் யார் யாரோடு பேசுகிறான் என்பது கண்காணிக்கப்பட்டன. இந்த நிலையில் தான் வீட்டுக்குச் சென்று தன் குடும்பத்திற்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்ய முடியாமல் அவன் தவித்தான். ஏதும் அறியாத தன் மனைவி, பிள்ளைகள் எப்படி வாழ்வார்கள், அவர்களுக்கு தன்னை விட்டால் வேறு வாழ்வாதாரம் இல்லையே என்று அவன் குழம்பினான். தனது சிறையறையில் இருந்துகொண்டு சிந்தித்துக் கொண்டே இருந்தான். மறுநாள், சிறைக்காவலரிடம், தன் மனைவியை தொலைபேசியில் தொடர்பு கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அனுமதி மறுக்கப்பட்டது. எனவே ஒரு சிறைக்காவலரின் உதவியோடு இரகசியமாக தன் மனைவிக்கு ஒரு கடிதம் எழுதினான். அந்தக் காவலர் அக்கடிதத்தை அவனது மனைவியிடம் சேர்த்துவிடுவதாக வாக்கு கொடுத்தார்.



இரண்டு நாட்கள் கழித்து அவனது மனைவி அவனைக் காண சிறைச்சாலைக்கு வருகின்றாள். வந்து அவனிடம், 'திடீரென்று நம் வீட்டுக்கு காவலர்கள் சிலர் வந்து நம் வீட்டுக்குப் பின்புறம் உள்ள தரிசு காணியை நன்றாக கொத்தி அதில் இருந்த கற்களையெல்லாம் அகற்றினார்கள். புல் மண்டிக்கிடந்த புதர்களையெல்லாம் அகற்றினார்கள். அதன் பின் சென்றுவிட்டார்கள்' என்று கூறுகிறாள்.

அதற்கு அந்த மனிதன், 'நான் தான் அவர்களை அனுப்பினேன். உனக்கு கடிதம் எழுதுவதைப்போல ஒரு கடிதத்தை எழுதினேன். அதில், நம் வீட்டுப்பின்புறத்தில் செம்மைப் படுத்த முடியாமல் கிடக்கும் அந்தக் காணியில் தான் நான் திருடிய பணத்தை புதைத்து வைத்திருப்பதாக எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு அந்தக் காணியில் தான் பணம் இருக்கும் என்று நினைத்து அதனைத் தோண்டியிருக்கிறார்கள். நீ கவலைப்படாதே, இப்போது அவர்கள் தோண்டி சுத்தம் செய்த இடத்தில் பாத்தியிட்டு விவசாயம் செய். நான் வரும் வரை அந்த காணி தான் உனக்கு வாழ்வாதாரம்' என்று கூறினானாம்.

நாம் இருக்கும் எந்த நிலையிலும் நாம் வாழத் தேவையான ஏற்பாடுகளை செய்துகொள்ளலாம் என்பதற்கு இது நல்ல எடுத்துக் காட்டு.

இந்த கொரோனா சூழ்நிலையிலும், வேலை இழந்து, வருமானம் இழந்து இனி என்ன செய்யப் போகிறோமோ என்று கவலைப் பட்டுக் கொண்டிராமல், இந்த நிலையையும் எப்படி நமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ண ஆரம்பித்தால், இந்த காலம் கூட நமக்கு துன்ப காலம் அல்ல. எல் லாவற்றிலும் நமக்குத் தேவையாக உள்ளது, நிதானமாக சிந்திக்கும் மனநிலையேயாகும்.

பல வேளைகளில் நாம் தளர்ந்து போவதற்குக் காரணம், 'சாதகமற்ற சூழ்நிலை உருவாகிவிட்டதே' என்பதால் அல்ல, மாறாக நம் மனதில் இது சாதகமற்ற சூழ்நிலை என்று நமக்கு நாமே முடிவு எடுப்பது தான். நம் மனதின் முடிவுகள் மிக முக்கியம்.

நாம் எப்படி வாழப் போகிறோம் என்பதை நம் மனதில் நாம் தான் முடிவெடுக்கிறோம். மகிழ்ச்சியாக வாழப் போகிறோமா, நிம்மதியாக வாழப்போகிறோமா, வெற்றிகரமாக வாழப் போகிறோமா என்ற எல்லா கேள்விகளும் நம் மனதில் தான் உள்ளன. நாம் மகிழ்ச்சியாக வாழப் போகிறோம் என்று முடிவெடுத்தால் மகிழ்ச்சியாக வாழ்கிறோம். இந்தத் தருணத்தில் மகிழ்ச்சிக்குத் தடையாக இருப்பவை என்றெண்ணாமல், நம்மைச் சுற்றியிருப்பவற்றை மகிழ்ச்சிக்கான படிக்கற்கள் என்று நினைத்து அந்த சூழ்நிலையை அது எப்படிப்பட்டதாக இருந்தாலும் அதனை நமக்கு சாதகமாக பயன்படுத்த விழைகின்றோம், நாம் மகிழ்ச்சியாக வாழ்கின்றோம். இது போல நிம்மதி, கவலை, பயம், வெறுப்பு என்று எல்லா உணர்வுகளுமே நமது தீர்வாகவே இருக்கின்றன. நான் நிம்மதியாக இருக்க தீர்மானித்தால் நிம்மதியாக இருக்கின்றேன், கவலைப்பட தீர்மானித்தால், கவலைப் படுகிறேன், சண்டையிட தீர்மானித்தால், எப்படியாவது ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து சண்டையிடுகிறேன், நட்புறவாட தீர்மானித்தால் அதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டுபிடித்து எப்படியாவது நட்புறவாடுகிறேன். இது போல அனைத்துமே நம் முடிவில் தான் இருக்கின்றது.


எனவே சிறந்த முடிவுகளை நம் மனதில் எடுப்போம், சிறந்த வாழ்க்கை வாழுவோம். இதற்காகத்தான் வள்ளுவர் அழகாக கூறுவார்,

'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல், மற்றவை
தள்ளினும் தள்ளாமை நீர்த்து' என்று!


எனவே நமது எண்ணங்களை உயர்த்துவோம், மற்ற தேவையற்ற எண்ணங்களை தள்ளிவிடுவோம், வாழ்வு மகிழ்ச்சியாக மாறும்.

எனவே இத்தகைய தெளிவு நம் மனதில் பிறக்கின்றபோது இதுவே மனிதத்தின் முதிர்ச்சியாகும். முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாக வாழ உங்களை அன்புடன் வாழ்த்தி விடைபெறுகிறேன். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்றி! வணக்கம்!



## புனித லூக்கா நற்செய்தி - அதி 22 - 24
## போட்டி முடிவுகள்



பங்கு பற்றியவர்கள் : 49 பேர்
மிகச்சரியாக விடையளித்தோர் : 12 பேர்

### பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/-
ஏ. சாளினி
இருதயபுரம்
மூதூர்

2ம் பரிசு 300/- ரூபா
யோன் அன்ரூ சந்திரா
இல 162/3, லோவர் வீதி,
உவர்மலை

3ம் பரிசு 200/- ரூபா
ஜெசானியா இம்மானுவேல்
இல: 30, சங்க வீதி,
திருகோணமலை


### பாராட்டுக்குரியவர்கள்

01. பி.லெய்ஷி - இருதயபுரம்
02. எஸ். கேஷஷி - இருதயபுரம்
03. ஏ. கிருஷாளினி - இருதயபுரம்
04. ஜே. சர்மிஷா - இருதயபுரம்
05. ச. அபிலாஷினி - இருதயபுரம்
06. பி. கொன்சலா - உவர்மலை
07. ஐ. டெலிஷா - குவாடலூப்பே
08. ஐ. டனிர்ஷரோன் - குவாடலூப்பே
09. ஏ. வலண்டினா - பாலையூற்று

நீ நண்பனாக இரு, ஆனால் உனக்கு நண்பன் இருக்க வேண்டுமென்று நினைக்காதே. - ஹிட்லர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி
# விடுபட்ட எழுத்துப் புதிர்போட்டி - 33
## லூக்கா நற்செய்தி 01 - 02 வரை
## போட்டி முடிவுகள்



| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வா | ளை | ட | ட் | க் | ம் | ப | ம் | டு | கு | ன் | பி | கோ | க் | யா |
| ன | | த | ம் | உ | ள் | ள | த் | தி | ல் | இ | ரு | த் | தி | |
| தூ | அ | கு | ஸ் | து | சீ | ச | ர் | | அ | ர | தீ | | ய் | ர் |
| த | லை | ம | க | னை | | | றா | ஆ | ரு | வெ | வ | எ | செ | வ |
| ரி | பே | ர | ர | சு | | து | கி | ண் | ள் | ல் | ன | ன் | ற் | ன |
| ட | வு | தி | | யே | ர் | ணி | க் | ட | மி | லா | த் | ஆ | ந | மா |
| ம் | தி | மை | | இ | வ | க | ரு | வ | க | ம் | தொ | ண் | ம் | த |
| | ப | அ | ல் | டை | ற | ளி | தி | ரா | ப் | | ட் | ட | டு | ந் |
| | ரை | உ | யி | ய | ற் | ல் | ந் | கி | பெ | | டி | வ | ட் | ப |
| கா | ய | ன் | தி | ர் | பெ | பொ | ற | ய | ற் | ம் | யி | ரி | யூ | ப் |
| ஸ் | பெ | ன | டு | க | று | தி | பி | மெ | ற | ல | ல் | ன் | சி | ஓ |
| பா | | த | வி | ள் | பே | ந் | | சி | வ | கா | யே | தா | ச் | ண |
| | | த் | | | | து | | யா | ரே | று | ரி | ய் | ழ் | ம |
| தா | வீ | தி | ன் | அ | ரி | ய | ணை | யை | | பே | பி | | கி | |
| வ | ய | ல் | வெ | ளி | யி | ல் | த | லை | மு | றை | க | | ம | |

01. வானதூதரிடன் 1:34
02. அகுஸ்துசீசர் 2:01
03. தலைமகனை 2:07
04. இடையர்கள் 2:08
05. பிறந்திருக்கிறார் 2:11
06. தீவனத் தொட்டியில் 2:07
07. துணிகளில் பொதிந்து 2:08
08. ஆண்டவராகிய மெசியா 2:11
09. அருள்மிகப் பெற்றவரே 1:28
10. தாவீதின் அரியணையை 1:32
11. யாக்கோபின் குடும்பம் 1:33
12. இயேசு 1:31
13. மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி 2:10
14. உன்னதத்தில் 2:13
15. தம் உள்ளத்தில் இருத்தி 2:19
16. பேரரசு 2:1
17. பெயரை பதிவு 2:3
18. விடுதியில் 2:7
19. என் ஆண்டவரின் தாய் 1:43
20. வயல் வெளியில் 2:8
21. பேறு பெற்றவர் 1:44
22. பேறு காலம் 2:6
23. அமைதி 2:4
24. பாஸ்கா 2:41
25. இரவெலாம் 2:8
26. மண ஒப்பந்தமானவர் 1:27
27. கபிரியேல் 1:26
28. தலைமுறை 1:48
29. கட்டளை 2:1

கலந்துகொண்டோர் : 36 பேர்

சரியாக விடையளித்தோர் : 17 பேர்

### பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/- ரூபாய்
ஸ்ரெலா ஜெரோம்
6ம் வட்டாரம்
சாம்பல்தீவு
திருகோணமலை

2ம் பரிசு 300/- ரூபாய்
சு. எமிலராஜ்
ழே - 48 நித்தியபுரி
திருகோணமலை

3ம் பரிசு 200/- ரூபாய்
சு. பகீதரன்
இல - 676 அன்புவழிபுரம்
திருகோணமலை

### பாராட்டுக்குரியவர்கள்

1. யோ. றெமின்டன் - இலிங்கநகர்
2. டெனிசன் அனுசியா - அன்புவழிபுரம்
3. ஜோ. அனஸ்ரி அமலராணி - அன்புவழிபுரம்
4. A. சுலக்ஷன் - பாலையூற்று
5. அ. கரோலின் கிறீப்திக்கா - பேராலயம்
6. நெ. டெலிஷா - குவாடலுாப்பே
7. நெ. டனிற் ஷரோன் - குவாடலுாப்பே
8. N. நிரோஷினி - சாம்பல்தீவு
9. பெ. அல்போண்சியா - அன்பவழிபுரம்
10. அ. யேசுதாசன் - அன்புவழிபுரம்
11. கார்மெலிற்றா விமலதாஸ் - பேராலயம்
12. அகஸ்சனா சுதாகரன் - கப்பல்துறை
13. சுதர்சினி சுதாகரன் - கப்பல்துறை
14. ரா. சுரோமி - பேராலயம்

மூதூர் பண்டிதர் சவரிமுத்து அவர்களின் நினைவாக குடும்பத்தினர் அனுசரணையில்

## குறுங்கதைப் போட்டி



# கோயில் பிச்சைக்காரன்

என்ற தலைப்பில்
250 - 300 சொற்களில் எழுதுங்கள் ஒரு குட்டி ஸ்டோரி
வெல்லுங்கள் பரிசுத்தொகையை!
10.09. 2020 இற்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு இவ்விளம்பரத்துடன் இணைத்து அனுப்பவும்.

1ம் பரிசு ரூபாய் 2500/-
2ம் பரிசு ரூபாய் 1500/-
3ம் பரிசு ரூபாய் 1000/-



## விளைவின் பலன்கள்

அருட்பணி என். சி. அருள்வரதன்

கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்.
போட்டியில் எல்லோரும் பங்கு கொள்ளலாம்

1ம் இடம் 500/-
2ம் இடம் 300/-
3ம் இடம் 200/-

இதோ கவிதை வரிகள்

- பலன்களை நிறையத் தந்திடுமே
- பாரிய உயர்வினைத்தந்து அது
- சேரும் போது விளைவு அது
- வானும் மழையும் நீரும் பயிரும்
- பெருமைகள் சேர்க்கும் வாழ்வினிலே
- பிரியாது என்றும் ஒன்றிணைந்தே
- ஆவல் கொண்டே ஒருமிராய்
- அன்போடு இணையும் உறவுகள்
- உண்மை நட்பது உடைவதில்லையே
- இன்னலோ இடரோ எது வந்தாலும்
- அன்பால் இணைந்த நட்பு அது
- பகையும் இல்லை பழிகளுமில்லை


இப்போது கவிதை வரிகளை
சரியாக வடிவமையுங்கள்

புகழை மறந்தாலும் நீ பட்ட அவமானங்களை மறக்காதே. அது இன்னொரு முறை அவமானப்படாமல் காப்பாற்றும். - ஹிட்லர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான போட்டி
## படத்திலுள்ள 06 வித்தியாசங்களை கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்





- ❖ பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- ❖ திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 இற்கு மாத்திரம் நிறம் தீட்டி வித்தியாசங்களை கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- ❖ 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்
  1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=

பெயர் ..........................................................................

முகவரி ..........................................................................

பங்கு ..........................................................................

தரம் ..........................................................................

**முடிவுத் திகதி 10.09.2020**

## சிறுவர்களுக்கு ...

ஒரு சிறுவன் குதிரைவண்டி மூலமாகத் தனது பள்ளிக்குச் செல்வது வழக்கம். அந்தக் குதிரை வண்டிமீதும், குதிரையோட்டி மீதும் அந்தச் சிறுவனுக்குத் தீரா காதல். ஒருநாள் அவனது வகுப்பறையில் ஆசிரியர் அனைத்து மாணவர்களிடமும் ஒரு வழக்கமான கேள்வியைக் கேட்டார். "நீங்கள் பெரியவனானதும் என்னவாக ஆசைப்படுகிறீர்கள்?" என்ற ஆசிரியரின் கேள்விக்கு மாணவர்கள் டாக்டர், போலீஸ், வக்கீல், ஆசிரியர் எனப் பல பதில்களைக் கூறினார்கள். குதிரை வண்டி மீது தீரா காதல்கொண்ட அந்தச் சிறுவன், நான் குதிரையோட்டியாக ஆவேன்" என்றான்.



இதைக் கேட்டதும் வகுப்பில் பலத்த சிரிப்பொலி எழுந்தது. மாணவர்கள் அனைவரும் அந்தச் சிறுவனைக் கிண்டல் செய்தார்கள். ஆசிரியர் சிறுவனிடம், "எப்போதும் உயர்ந்த இலட்சியங்கள் நமக்கு வேண்டும். குதிரை வண்டிக்காரனாக மாறுவதெல்லாம் ஒரு மனிதனின் இலட்சியமாக இருக்கக் கூடாது" என அறிவுரை கூறி அவனை அமரவைத்தார்.

அந்தச் சிறுவனுக்குக் குழப்பம். குதிரை வண்டிக்காரனாக ஆவது ஏன் உயர்ந்த இலட்சியமாக இல்லை எனத் தனக்குள் கேட்க ஆரம்பித்தான். மாலையில் வீட்டுக்குச் சென்றவுடன் தன் தாயிடம் இது குறித்து அவன் வினவினான். அதற்கு அவன் தாய், "நீ ஏன் குதிரை வண்டிக்காரனாக வர ஆசைப்படுகிறாய்?" என்றார்.

"அம்மா, நான் தினமும் பள்ளிக்குச் செல்லும்போது நமது குதிரை வண்டிக்காரர் குதிரை ஓட்டுவதைப் பார்ப்பேன். அவர் குதிரைகளை ஓட்டுவது மிகவும் அழகாகவும், என் மனதுக்குப் பிடித்தமானதாகவும் இருக்கும். மனதுக்குப் பிடித்ததைச் செய்வதில் என்ன தவறு இருக்க முடியும்? எனவேதான் ஆசிரியர் எனது எதிர்கால இலட்சியம் என்னவென்று கேட்டதும் குதிரைக்காரன் ஆவேன் என்று கூறினேன்" என்றான் அந்த சிறுவன்.

அதைக் கேட்ட தாய் சற்றும் கோபப்படாமல் வீட்டின் பூஜை அறைக்குள் சென்று கிருஷ்ணர், அர்ஜுனனுக்குத் தேர் ஓட்டுமாறு இருக்கும் ஒரு மகாபாரதப் படத்தை எடுத்து வந்தார். அதை மகனிடம் காட்டி மகனே நீ குதிரை வண்டிக்காரன் ஆவேன் என்று கூறியதில் தவறில்லை. ஆனால் நீ ஒரு சாதாரண குதிரை வண்டிக்காரன் ஆகக்கூடாது. மகாபாரதத்தில் அர்ஜுனனுக்குத் தேர் ஓட்டினானே கிருஷ்ணன், அந்த கிருஷ்ணனைப் போன்ற மிகச்சிறந்த சாரதியாக நீ திகழ வேண்டும் என்றார்.

அந்தச் சிறுவன் தான் இந்தியாவின் தலைசிறந்த சமயத் தலைவர்களுள் ஒருவரும் அத்வைத வேதாந்த தத்துவங்களை அடிப்டையாகக் கொண்ட பல சொற்பொழிவுகளை நிகழ்த்தியவரும், இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடரும் மக்களைச் சரியான ஆன்மீகப் பாதையில் வழிநடத்திய சாரதியுமான சுவாமி விவேகானந்தர். அவரின் தாயாரான புவனேஸ்வரி தேவியின் நேர்மறையான, உயர்ந்த எண்ணமே விவேகானந்தர் என்னும் ஞானமாய் மலர்ந்தது.

குதிரையோட்டி ஆவேன் என மகன் கூறியதைக் கேட்டு தாய் கோபம் கொண்டிருந்தாலோ பிற குழந்தைகளுடன் ஒப்பிட்டுக் கண்டித்திருந்தாலோ அல்லது பிறரது கிண்டலை நியாயப்படுத்தியிருந்தாலோ நமக்கு விவேகானந்தர் என்னும் ஞானி கிடைத்திருக்கமாட்டார்.

குழந்தையின் நன்மைக்கு எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும் என்றுமே அவர்களைப் பிறகுழந்தைகளுடன் ஒப்பிடுகிறோம். போட்டிபோடச் சொல்கிறோம் என்பது பெற்றோரின் எண்ணம் இந்த இடத்தில் ஒரு விஷயத்தை நாம் புரிந்துகொள்ள மறுக்கிறோம். படைப்பால் ஒவ்வொரு மனிதனும் தனித்துவமானவன் என்பது உண்மை. எந்த இரு மனிதர்களின் எண்ணங்களும், செயல்களும் எப்போதும் ஒரே நேர்கோட்டில் வராது என்பது நிதர்சனம். எனவே மற்றவர்களுடன் நம் குழந்தைகளை ஒப்பிடுவதும் போட்டிபோடச் செய்வதும் தேவையற்றதுதானே!



ஒப்பீடுகள் பற்றி ஓஷோ கூறும்போது,
"நல்லவேளை மனிதர்களோடு மட்டும் நீ
உன்னை ஒப்பிட்டுக்கொள்கிறாய்,
மரங்களுடன் உன்னை ஒப்பிட்டுக் கொள்ளவில்லை
அப்படிச் செய்திருந்தால் நீ மிகுந்த
பொறாமைப்பட்டிருப்பாய்.
நான் மட்டும் ஏன் பச்சையாக இல்லை,
எனக்கு மட்டும் ஏன் பூக்களைத் தாங்கும்
சக்தி இல்லை என்றெல்லாம் கூட
நீ வருத்தப்பட்டிருப்பாய்"
என்று நகைச்சுவையாகக் குறிப்பிடுகிறார்.

இணையத்திலிருந்து ...

**பேசப்படும் சொல்லை விட எழுதப்படும் சொல்லே வலிமை வாய்ந்தது. – ஹிட்லர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசனக்கோவிலின் ஆண்டுவிழா ஆவணி - 15



திருகோணமலை புனித மரியாள் பேராலய
பெருவிழாவில் அன்னையின் ஆசிர் கூறி அனைத்து
மறைமாவட்ட நம்பிக்கையாளர்களையும் வாழ்த்துகிறோம்.

# வத்திக்கானின் அண்மைக்கால முக்கிய வெளியீடுகள்

## "திருஅவையின் நற்செய்தி அறிவிப்புப்பணியில் பங்குத்தள சமூகத்தின் மேய்ப்புப்பணிக்குரிய மாற்றங்கள்"

அருள்பணியாளர்களுக்குரிய
திருப்பீடப் பேராயத்தின் வெளியீடு

BOLLETTINO
SALA STAMPA DELLA SANTA SEDE

அருள்பணியாளர்களுக்குரிய திருப்பீடப் பேராயம் இத் திங்களன்று வெளியிட்டுள்ள நற்செய்தி அறிவிப்புப்பணியில் பங்குத் தளங்களில் பணி குறித்த இந்த புதிய ஏட்டில் புதிதாக சட்டங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லையாயினும், பழைய விதி களை சிறப்பான வகையில் செயல்படுத்துவதற்குரிய வழி முறைகள் காட்டப்பட்டுள்ளன.

திருமுழுக்குப் பெற்ற அனைவரின் கடமைகளை வலி யுறுத்தும் இந்த ஏடு பங்குத்தள அமைப்புமுறைகளில் மறைப் பணி புதுப்பித்தலின் அவசியம் குறித்து வலியுறுத்துகிறது. இவ்வேடானது 11 பிரிவுகளைக் கொண்டுள்ளது.

1 முதல் 6 வரையுள்ள பிரிவுகள்
- மேய்ப்புப்பணி சார்புடைய மாற்றங்கள்.
- இன்றைய நவீன உலகில் மறைப்பணி.
- பங்குத்தளங்களின் மதிப்பு

7 முதல் 11 வரையுள்ள பிரிவுகள்
- பங்குத்தளப் பிரிவுகள்.
- பங்குத்தளங்களில் உள்ள வெவ்வேறு சமூகங்களின் பொறுப்புகள்.

அருளடையாளங்களை நிறைவேற்றுதல் குறித்து விவாதிக்கும் இவ்வேட்டின் இறுதிப் பிரிவு, எந்த அருளடையாளமும் இலவசமாக வழங்கப்பட வேண்டும் எனவும் அருள்பணியாளர்களின் நிதி நிர்வாகம் வெளிப்படையானதாக இருக்கவேண்டும் என்பதையும் உறுதியாய் அறிவிக்கிறது.

## "VADE ME CUM - பாலியல் முறைகேடுகளைக் கையாள புதிய கையேடு

விசுவாசக் கோட்பாட்டு
பேராயத்தின் வெளியீடு




இலத்தீன் மொழியில் "என்னோடு பயணியுங்கள்" – (go with me) என்று பொருள்படும் Vademecum என்ற பெயரோடு சிறுவர், சிறுமியர் மீதும், வலுவற்ற வர்கள் மீதும் அருள்பணியாளர்கள் மற்றும் திருஅவை அதிகாரிகளால் உருவாகும் பாலியல் முறைகேடுகளை கையாளும் வழிமுறைகளைத் தொகுத்து ஜூலை 16 இவ்வியாழனன்று வெளியிட்டுள்ளது. விசுவாசக்கோட் பாட்டு பேராயம் இந்த கையேடு 9 பிரிவுகளையும், 30 பக்கங்களையும் கொண்டுள்ளது. ஆயர் பேரவைத் தலைவர்களுடன் திருத்தந்தை மேற்கொண்ட சந்திப்பில் அவர் வழங்கிய 21 கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இந்த கையேடு உருவாக்கப்பட்டுள்ளது.

பாலியல் முறைகேடுகளை ஒழிப்பதற்கு 2001ம் ஆண்டு திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் அவர்களாலும், 2010ம் ஆண்டு முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களாலும் வெளியிடப்பட்ட the Motu proprio *Sacramentorum Sanctitatis Tutela* ஏடுகளை கருத்தில் கொண்டு இந்தக் கையேடு உருவாக்கப் பட்டுள்ளது.

## புதிய மறைக்கல்வித் தொகுப்பு

புதியவழி நற்செய்தி அறிவிப்புப்பணி திருப்பீட வெளியீடு




புதிய மறைக்கல்வி தொகுப்பின் இத்தாலியப் பிரதி ஜூன் 25ல் வெளியிடப்பட்டது. விரைவில் இந்த தொகுப்பின் ஏனைய முக்கிய மொழி களிலான வெளியீடு மக்கள் கைகளுக்கு வரவுள்ளது. இது இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்திற்குப் பின் மூன்றாவது முறையாக வெளிவந் துள்ள மறைக்கல்வித் தொகுப்பு ஆகும். இது 3 பகுதிகளையும், 12 பிரிவு களையும் கொண்டதாகும்.

நாம் வாழும் டிஜிட்டல் கலாச்சாரத்தின் உலகளாவிய கூறுகள், அவை, கடந்த பத்து ஆண்டுகளில் மக்களின் பழக்கவழக்கங்களில் வெளிப் படுத்தியுள்ள அடிப்படை மாற்றம் தனிப்பட்ட நபரின் தனித்துவம் மற்றும் ஒருவர் ஒருவரோடு உள்ள உறவுகளில் உருவாகியுள்ள தாக்கங்கள் போன்றவை இந்த புதியத் தொகுப்பு தயாரிக்கப்பட பின்னணி காரணிகளாகக் காணப்பட்டுள்ளன. இவற்றிற்கு மேலாக இறையியல் மற்றும் திருஅவை சார்ந்த காரணங்களும் இந்த தொகுப்பு தயாரிக்கப்படுவதற்கான காரணிகளாகும்.

மறைக்கல்வி நற்செய்தி அறிவிப்புப்பணியோடு ஒன்றிணைக்கப்பட வேண்டும். இது அதிலிருந்து பிரிக்கப்படக் கூடாது. ஏனெனில் இப்பணி உயிர்த்த கிறிஸ்துவால் திருஅவையிடம் ஒப்டைக்கப்பட்ட பணி என்று இத்தொகுப்பை வெளியிட்டு செய்தியாளர்களிடையே உரையாற்றிய புதிய வழி நற்செய்தி அறிவிப்புப்பணி திருப்பீட அவையின் தலைவர் பேராயர் Rino Fisichella தெரிவித்தார். திருஅவை என்றென்றும் தளராமல் அறிவிக்கவேண்டிய நற்செய்திப்பணிக்கு இந்த புதிய மறைக்கல்வித் தொகுப்பு மிகவும் உதவியாக இருக்கும் என்று தான் நம்புவதாக அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by : Wanasinghe Printers, Batticaloa. 065-2227170